உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 36 | பிங்கள - புரட்டாசி - 10—10—77 | இதழ் 11

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே — சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## "அன்னை அடிமலர் போற்றுவோம்"

### அன்னை வழிபாடு :

ஒப்புயர்வற்ற சிவபரம்பொருளின், அளம்பருங் கருணையினையே, "சக்தி" என்று போற்றுதல் சைவ - மரபு. "அருளது சக்தியாகும் அரன் தனக்கு" என்பது சிவஞான சித்தியில் கூறப்படுகிறது. சக்தியைப் போற்றிவரும் மரபு தமிழகத்தில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வருகிறது. வீரம், செல்வம், கல்வி என்பன மனித இனத்தின் இன்றியமையாத் தேவைகள். இவற்றை எல்லாம் பெற அருளும் அம்மையைப் பெண் வடிவில் போற்றி வழிபட்டு வரும் மரபினைச் சங்க இலக்கியங்கள் விரிவாகப் பேசுகின்றன. "காடு கிழாள்" எனப் பரிபாடலும், "வெற்றிவெல் போர்க் கொற்றவை" எனத் திருமுருகாற்றுப்படையும்; கன்னி, மோடி போன்ற சில பெயர்களை ஏனைச் சங்க இலக்கியங்களும் சுட்டு கின்றன.

கொற்றவையை ஐயை எனப்போற்றி, வேட்டுவர் வழிபட்ட திறத்தைச் சிலப்பதிகார வேட்டுவரி பேசுகிறது.

தேவி மாகாத்மியம் :

வேத, ஆகமங்களிலும், இவற்றை மூலமாகக் கொண்டு எழுந்த நூல்களிலும் சக்தி வழிபாடு பற்றியும், அன்னையின் ஆற்றல் (தேவி மாகாத்மியம்) பற்றியும் பல்வேறு செய்திகள் காணப்பெறுகின்றன. தேவி மாகாத்மியம் என்ற வடமொழி நூல், அம்மை தன்னை அன்புடன் வழிபட்ட நல்லோர் பொருட்டுத் தீயவர்களை அழித்தருளிய பல வரலாற்றை விளக்குகின்றது. அன்னை கொற்றவை வடிவில் எழுந்தருளி மது-கைடபர் என்பாரை அழித்ததும், மகிடாசுரனைக் கொன்றதும், சும்ப - நிசும்பர்களை வென்றடக்கியதுமாகிய நிகழ்ச்சிகளை இந்நூலில் பரக்கக் காணலாம். தேவி மாகாத்மியம் இத்தகு வரலாறுகளைக் கூறுவதோடு, உயர்ந்த மந்திரங்களையும் தன்னுள் கொண்டு விளங்குவது.

நவராத்திரி விழா :

உலக நாயகியாகிய பராசக்திக்கு உகந்த திருநாட்கள் நவராத்திரி நாட்கள். புரட்டாசித் திங்களில், வளர்பிறை முதல் நாள் தொடங்கி ஒன்பதாம் நாள் முடிய (பிரதமை முதல் நவமி ஈறாக) உள்ள நாட்களே நவராத்திரி நாட்கள் எனப்பெறும். சரத் காலம் எனப்படும் இப்பருவம் எமனின் கோரைப் பல் போன்றது என்று கூறுவர். எனவே, இக்காலத்தில் தீமையிலிருந்து விடுபட்டு உய்ய அன்னை பராசக்தியை வழிபடுதல் இன்றியமையாதது. அன்னையை முதல் மூன்று நாட்கள், வெற்றிதரும் கொற்றவையாகவும், அடுத்த மூன்று நாட்கள் செல்வத்தை வழங்கும் திருமகளாகவும், இறுதி மூன்று நாட்கள் கல்வி நல்கும் கலைமகளாகவும் போற்றி வழிபடல் மரபு.

வழிபாட்டு நெறி ;

நவராத்திரி நாட்களில் அன்னையை, கும்பத்திலோ அல்லது பிம்பத்திலோ எழுந்தருள்வித்து, தூய்மைகாத்து, ஒரு வேளை மட்டும் உணவுகொண்டு, உரிய தோத்திரங்கள் கூறி வழிபடுதல் வேண்டும். திருக்கோயில் வழிபாடும் இன்றியமையாதது. வழிபாட்டு நேரத்தில் தேவி பாகவதத்தில் அமைந்துள்ள, "சப்தசதீ" என்னும் எழுநூறு மந்திரங்களைத் தாமே பாராயணம்

செய்வதோ, அல்லது தக்கவர்களைப் பாராயணம் செய்யச்செய்து வழிபடுவதோ சிறப்பாகும். தமிழில் அன்னையின் அருள் விளக்கும் அபிராமி அந்தாதி, சகலகலா வல்லிமாலை, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் போன்ற அருள் நூல்களை ஓதி வழிபடுவதும் சிறப்பேயாகும். நவராத்திரி வழிபாடு எல்லாத் தீமைகளையும் அகற்றி செல்வம், வாழ்நாள் மகப்பேறு முதலிய பல பேறுகளையும் வழங்கும்.

சதசண்டி வேள்வி :

உலக நலங்கருதி, திருக்கோயில்களிலும் சிறப்பு வழிபாடு செய்தல் வேண்டும். அம்மையின் சந்நிதியில் நவராத்திரி நாட்களில் இயற்றப்பெறும் 'சண்டி வேள்வி' பெருநலன் விளைக்க வல்லது. தேவி மாகாத்மியத்தில் காணப்பெறும் சப்தசதி மந்திரங்களைக்கொண்டு வேள்வி இயற்றுவதே 'சண்டி வேள்வி, (ஹோமம்) எனப்படுகிறது. இந்த நூலை நூறு முறை பாராயணம் செய்து, அதில் பத்தில் ஒரு பாகம், அதாவது பத்து முறை இந்த மந்திரங்களால் தியானித்து, எள், நெய்கலந்த பாயசத்தை நிவேதித்து வேள்வி இயற்றுவதே 'சதசண்டி ஹோமம்' எனப்படுகிறது. நமது தருமை யாதீனத்தில் பதினெண் திருக்கரங்களோடு எழுந்தருளி அருள்பாலிக்கும் கொற்றவைப்பிராட்டிக்கு இவ்வாண்டு, மிகச் சிறப்பாக, உலக நலங்கருதி, நவராத்திரி நாட்களில் சதசண்டி வேள்வி நடைபெறவுள்ளது

சுவாசினிபூசை :

இவ்வாறு நிகழும் சதசண்டி வேள்வியில், தேவிக்குச் சிறப்பாகச் செய்யப்படவேண்டுவது சுவாசினி, குமாரி, வடு என்ற மூன்று வகை பூஜை எனப்படுகிறது.

முதற்கண்ணதாகிய சுவாசினி பூஜை, திருமணமான சுமங்கலிப் பெண்களைத் தேவியாகவே பாவித்துப் பூசிப்பதாகும். மங்கலப்பெண்களுக்கு, ஆடை, அணிகலன்கள், மங்கலப்பொருட்கள் முதலியவற்றை வழங்கி, அம்மை சந்நிதியில் தேவியாகப் பாவித்து பூசிப்பது சுவாசினி பூஜையாகும். இவ்வகைப் பூஜையினை மேற்கொள்வோர் இம்மையில் நலமுடன் வாழ்வதோடு மறுமையில் வீடுபேற்றையும் பெறுவர். மேலும் கணவன் மனைவியராய் எல்லாச் செல்வங்களும் பெற்று என்றும் பிரியாத நல்வாழ்வு பெறுவர் என நூல்கள் கூறுகின்றன. 'லலிதா சகஸ்ரநாமம்' அம்மையை "சுவாசின் யார்ச்சனப் ரீதா" (சுவாசினி வழிபாட்டில் விருப்பமுடையவள்) எனக் கூறுகின்றது.

## குமாரி பூசை :

இரண்டாவதாகிய குமாரிபூசை இரண்டு வயது முதல் பத்து வயதுவரையுள்ளபெண்குழந்தையை இந்நாட்களில் அன்னையாகப் பாவித்து வழிபடுதல் வழக்கு. முறையே இவர்களுக்கு, குமரிகா, திரிமூர்த்தி, கல்யாணி, ரோகிணி, காளி, சண்டிகா, சாம்பவீ, துர்க்கா, சுபத்திரா எனப்பெயரிட்டு ஆடை அணிகலன்களை வழங்கி பூசிப்பது பெருநலன் விளைவிப்பது. இத்தகு கன்னி பூசையால் துன்பம், ஏழ்மை, பகை, இவை நீங்கும். செல்வம் பெருகும். நற்பிள்ளைப் பேறு வாய்க்கும். இம்மை மறுமை இன்பங்கள் வாய்க்கும் என நூல்கள் கூறுகின்றன.

## வடுபூசை :

மூன்றுவதாகியவடுபூஜைஎன்பது, பிரமச்சாரியாகிய இளைஞர்களைப் பைரவப் பிரதிநிதிகளாகப் பாவித்துப் பூசிப்பதைக் குறிக்கும். அம்மை சும்பாசுரனை வதைக்கச் சென்ற காலை, சிவபெருமானையே துணையாகக்கொண்டு, தம் இருப்பிடத்தை 'க்ஷேத்ரபாலன்' என்ற பெயரில் காவல் அமர்த்திச் சென்றனள். எனவே, சப்தசதிப் பெருவேள்வியில், அசிதாங்கன் முதலிய எட்டு பைரவர்களையும் நினைந்து வடுபூஜை செய்தல் மரபு. இப்பூஜை அன்னை அருள்பெற எளிதில் வேள்வியின் பயனை அடைய உதவுகின்றது.

## போற்றிட வாரீர் !

கடந்த ஆண்டுகளைப் போலவே, இவ்வாண்டும்; தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவுளப் பாங்கின்வண்ணம், அன்னை துர்க்கா தேவியின் சந்நிதியில் பெரிய வேள்விச்சாலை அமைக்கப்பெற்று, முறையாக நவராத்திரி பூஜை 13—10—77 முதல் 21—10—77 வரை மிகச்சிறப்பாக நடைபெறுகிறது. உலக நலங்கருதி, மக்கள் வாழ்வில் பசியும் பிணியும் நீங்கி, வசியும் வளனும் சுரக்க இயற்றப்பெறும் சத சண்டி வேள்வியில் அன்பர்கள் பங்கேற்று, அன்னை திருவடிகளைப் போற்றி வழிபடுவார்களாக. ஆங்காங்குள்ள அன்பர்கள் இயன்ற வரை மேற்கூறியாங்கு நவராத்திரி பூசையில் ஈடுபாடுகொண்டு பாராயணம், திருக்கோயில் வழிபாடு இவற்றைச் செய்து இம்மை மறுமை நலன் பெற்று உய்வார்களாக.

> "நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பது உன்னை
> என்றும் வணங்குவது உன் மலர்த்தாள் எழுதாமறையின்
> ஒன்றும் அரும்பொருளே அருளே உமையே இமயத்து
> அன்றும் பிறந்தவளே அழியாமுத்தி ஆனந்தமே".

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

வழங்கியருளிய

# ஆசியுரை*

( மலர் 36. இதழ் 4. பக்கம் 162 இன் தொடர்ச்சி )

## அஞ்செழுத்து :

சைவ சமயத்தின் தாரகமந்திரமாய், மந்திரங்கள் எல்லாவற்றிற்கும் முடிமணியாய் விளங்குவது திருவைந்தெழுத்து. தேவாரத் திருமுறையுள் இதன் சிறப்பைத் திருஞானசம்பந்தர் இரண்டு திருப்பதிகங்களாலும், திருநாவுக்கரசரும் சுந்தரரும் ஒவ்வொரு திருப்பதிகங்களாலும் அருளிச்செய்துள்ளனர்.

பதி பசு பாசம் ஆகிய முப்பொருளையும் அறிவித்து நிற்கும் சிவமூலமந்திரமாகிய திருவைந்தெழுத்தில் சி – சிவனையும், வ – சக்தியையும் (பதி), ய – ஆன்மாவையும் (பசு), ந – திரோதான சக்தியையும் ம – ஆணவமலத்தையும் (பாசம்), குறிக்கும்.

> " சிவன் அருள் ஆவி திரோதம் மலம் ஐந்தும்
> அவன் எழுத் தஞ்சின் அடைவாம் "

என்பது உண்மை விளக்கம். பாசங்களின் நீங்கி அருட்சக்தி துணையாக சிவனடி அடைதலே உயிர்கள் பெறுதற்குரிய முடிந்த பயன் என்பதை ஐந்தெழுத்து உணர்த்துகிறது. அறிந்தோ அறியாமலோ இம்மந்திரத்தை ஓதுவார்க்கு வினையும் பயனை அப்பர்சுவாமிகள்,

---

*5—1—77 இல் திருவாதிரைத் தரிசனத்திற்கு எழுந்தருளிய போது சிதம்பரம் – கனகசபைநகரில் உள்ள தருமையாதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருமடத்தில் 'தில்லைத் தமிழ் மன்றத்தினருக்கு' வழங்கியருளியது.

" ஏதும் ஒன்றும் அறிவில ராயினும்
ஓதி அஞ்செழுத் தும்உணர் வார்கட்குப்
பேதம் இன்றி அவரவர் உள்ளத்தே
மாதும் தாமும் மகிழ்வர்மாற் பேறரே "

என்று அருளிச்செய்கின்றார்.

## இறைவன் திருப்பெயர் :

பஞ்சாக்ஷரம் மந்திரமாக விளங்குவதோடு இறைவனது திருப்பெயராகவும் விளங்குவதை ஞானசம்பந்தர்,

" காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக்குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே "

என்று அருளிச்செய்கின்றார்.

அப்பர் சுவாமிகளும், " எந்தையார் திருநாமம் நமச்சிவாய என்றெழுவார்க்கு இருவிசும்பில் இருக்கலாமே " என்று அருளிச் செய்கின்றார்.

## ஐவகை அஞ்செழுத்து :

தூல பஞ்சாக்ஷரமாகிய நமசிவாய என்பது முதலில் எல்லோராலும் உபதேசமுறையால் கேட்டு ஓதத்தக்கதாகும். சூக்கும பஞ்சாக்ஷரமாகிய சிவாயநம என்பது முத்திப்பேற்றை விரும்பும் பரிபாகமுடையார், உபதேச முறையால் கேட்டு ஓதத்தக்கதாகும். சூக்கும பஞ்சாக்கரத்தில் உயிரை உணர்த்தும் யகரம் சத்தாகிய சிவத்தையும்அசத்தாகியபாசத்தையும் அறியும் நிலையில்சதசத்தாக நடுவில் அமைந்திருத்தலைக் காணலாம். சூக்கும பஞ்சாக்ஷரத்தை முத்திபஞ்சாக்கரம் என்றும், உருதலைமாணிக்கம் என்றும் கூறுவர். காரண பஞ்சாக்ஷரம் சிவயவசி சிவயசிவ என இருவகையாகக் கூறப்பெறும். இதற்கு இருதலை மாணிக்கம் என்றும், அதிசூக்கும பஞ்சாக்கரம் என்றும் பெயர்கள் வழங்குவது உண்டு. இது அதிதீவிர பக்குவிகட்கு நிர்வாணதீக்ஷை செய்து உபதேசிக்கத்தக்கது. இதுவும் முத்தி பஞ்சாக்கரமேயாகும். இது தேவாரத்திருமுறைகளில் நடுநாயகமாக வைத்தும் போற்றப்படுகிறது. நான்கு வேதங்களில் அதர்வண வேதத்தை ஏனை மூன்றனுள் அடக்கி வேதங்களை மூன்று (த்ரயீ) எனக் கூறுவர். அம்மூன்றில் நடுவில் விளங்குவது யஜுர்வேதம்

அவ்வேதத்தில் நடுநாயகமாக 'நமசிவாயச சிவதராயச' என்று திருவைந்தெழுத்து போற்றப்படுகிறது. இதனைத் திருஞான சம்பந்தர் 'வேதம் நான்கிலும் மெய்ப்பொருளாவது' என்று கூறியருளுகின்றார். தமிழ்வேதமாகவிளங்கும் தேவாரத்திருமுறை களிலும் திருவைந்தெழுத்து நடுநாயகமாய் விளங்குதலைக் காணலாம்.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் அருளியன தேவாரத் திருமுறைகள் எனப்பெறும். அவற்றுள் திருநாவுக்கரசர் தேவாரம் நடுவில் உள்ளது. அவர் பாடி யருளியவை 4, 5, 6 திருமுறைகள். அவற்றுள் நடுவணதாகிய ஐந்தாம் திருமுறையின் நடுவிலுள்ளது திருப்பாலைத்துறைத் திருப்பதிகம். இப்பதிகம் 11 பாடல்களை உடையது. அவற்றுள் 6 ஆவது திருப்பாடலில் சிவாய என்னும் முத்தி பஞ்சாக்கரம் நடுவில் வைத்துப் போற்றிக் கூறப்படுதலைக்காணலாம்.

" விண்ணினார்பணிந் தேத்த வியப்புறும்
மண்ணினார்மற வாது சிவாயவென்று
எண்ணினார்க்கு இடமா எழில் வானகம்
பண்ணினாரவர் பாலைத் துறையரே "

சிவ என்பது மகாகாரண பஞ்சாக்ஷரமாகும். சி என்பது மகாமநு எனப்படும். இது பெருவெழுத்து என்றும், பேசா எழுத்து என்றும் கூறப்படும்.

பஞ்சாக்ஷரத்தைக் குருமுகமாகப் பெற்று ஓதுதல் வேண்டும். ஓதுதலுக்கு ஜபம் என்று பெயர். பின் அதனையே நினைந்திருத் தல் தியானமாகும்.

மந்திரங்களை உச்சரித்தல் மானதம் மந்தம் உரை என மூவகைப்படும். மானதம் - மனத்தால்நினைத்தல். மந்தம் - தன் செவிகட்குமட்டும் கேட்கும்படி உச்சரித்தல். உரை - தனக்கும் பிறர்க்கும் கேட்கும்படி ஓதுதல் இத்தகைய பஞ்சாக்ஷரஜபமே நம் உயிரை ஈடேற்றம் செய்யவல்லதாகும்.

" அஞ்செழுத்தை விதிப்படிஉச் சரிக்க மதி அருக்கன்
அணை அரவம் போல் தோன்றும் ஆன்மாவில் அரனே "

என்பது சிவஞான சித்தியார்.

## கூத்தன் உருவில் அஞ்செழுத்து :

தில்லைப் பெருவெளியில் திருநடனமாடும் நடராசப் பெருமானின் திருமேனி ஐந்தெழுத்தாலமைந்தது. நடராஜ மூர்த்தியின் திருவுருவில் நகரம் திருவடியாகவும், மகரம் திருவுந்தியாகவும், சிகரம் திருத்தோளாகவும், வகரம் திருமுகமாகவும், யகரம் திருமுடியாகவும் விளங்குகிறது.

உடுக்கை ஏந்திய கை சிகரமாகவும், வீசிய கை வகரமாகவும், அபயகரம் யகரமாகவும், அனல் ஏந்திய கை நகரமாகவும், முயலகனை மிதித்த பாதம் மகரமாகவும் விளங்குகிறது என்று தூல சூக்கும பஞ்சாக்கர வடிவமாக நடராசப் பெருமானைக் குறிப்பிடுகிறது உண்மை விளக்கம்.

ஆடும்படிகேள் நல் லம்பலத்தான் ஐயனே
நாடும் திருவடியி லேநகரம் — கூடும்
மகரம் உதரம் வளர்தோள் சிகரம்
பகரும் முகம் வாமுடியம் பார்.

சேர்க்கும் துடிசிகரம் சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம் — பார்க்கில் இறைக்கு
அங்கி நகரம் அடிக்கீழ் முயலகனார்
தங்கும் மகரமது தான்.

நடராஜப் பெருமானின் திருக்கூத்து படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழிற் கூத்தாக விளங்குதலையும், உயிர்களுக்கு அக்கடவுள் செய்யும் அருளிப்பாட்டினை விளக்குவதாக அமைந்திருத்தலையும் உண்மை விளக்கம் நன்கு தெளிவிக்கிறது. ஆனந்தக்கூத்தனின் திருவுருவில் விளங்கும் உடுக்கை ஏந்தியகை படைத்தலையும், அபயகரம் காத்தலையும், அனல் ஏந்திய கை அழித்தலையும், ஊன்றிய திருவடி மறைத்தலையும், தூக்கிய திருவடி அருளலையும் தெரிவிக்கிறது.

## ஊன நடனமும் ஞான நடனமும் :

இப்பஞ்சகிருத்தியங்களும் பெத்தான்மாக்களாகிய பாசத்தில் உள்ள உயிர்கட்கே பொருந்தும் ஆதலின் இத்திருநடனம் ஊன நடனம் எனப்படும். இதனை,

" தோற்றம் துடியதனில் தோயும் திதி அமைப்பில்
சாற்றிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமாய்
ஊன்றும் மலர்ப்பதத்தில் உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு "

என விளக்குகிறது உண்மை விளக்கம். இனிப்பாசங்களின் நீங்கிய முத்தான்மாக்களிடத்து இறைவன் செய்யும் அருட் செயல்களும் இந்நடனத்தாலே குறிக்கப்படும். அதனை ஞான நடனம் என்று கூறுவர்.

உடுக்கையை அசைத்தல் உயிர்களைப் பிணித்திருக்கும் மாயையை உதறுதலைக் குறிக்கும். அனல் வல்வினைகளைச் சுடுதலைக் குறிக்கும். மலத்தை மேல் எழ ஒட்டாது அழுத்தல் ஊன்றிய திருவடியின் தொழில். ஆன்மாக்களிடம் அருட்பூரணம் மேலிடச்செய்தல் தூக்கிய திருவடியின் செயல். ஆனந்தவாரிதியில் உயிர்களைத் திளைக்கச் செய்தலையே அவரது பரதம் குறிக்கும் என்றும் கூறுகிறது உண்மை விளக்கம்.

" மாயை தனைஉதறி வல்வினையைச் சுட்டுமலம்
சாய அமுக்கிஅருள் தானெடுத்து—நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தானழுத்தல்
தானெந்தை யார்பரதம் தான் "

தரிசித்தற்குத்தான் மனிதப் பிறவி :

இத்தகைய தில்லைப் பெருமானின் பரமானந்த தாண்டவத்தைத் தரிசிப்பதைப் பெரும் பேறாகக் கருதுவது நம் சமய மரபாகும். சமயாசாரியர்களில் ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் தில்லையில் நடராசப் பெருமானைத் தரிசித்த நிகழ்ச்சியைச் சேக்கிழார் சிறப்பித்துக் கூறுவதைக் காணலாம். தரிசனம் என்ற சொல் சிதம்பர தரிசனத்தையே குறிப்பதையும், தரிசிக்க முத்திதரும் தலமாக இத்தலம் போற்றப் பெறுதலையும் நாம் காணலாம். தில்லைப் பெருமான் திருக்கூத்தினைத் தரிசித்தற்குத்தான் இப்பிறவி வாய்த்துள்ளது. ஏன் ? தரிசிக்கும்பேறு பெற்றால்தான் இம் மனிதப்பிறவி வேண்டும் என்று அப்பரடிகள் அறிவுறுத்தும் அழகிய பாடலை நாம் உணரவேண்டும்.

" குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்தபொற்பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே "

நடராசப் பெருமான் அருட்காட்சி வழங்கும் திருவாதிரைத் திருநாளில் அப்பெருமானது அருளாடலைத் தரிசிக்கும் பேறு பெற்ற அனைவர்க்கும் எல்லா நலன்களும் உண்டாகுமாறு ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

# சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரத்தில் சில அரிய சொல்லாட்சிகள்

புலவர், திரு. இரா. செல்வக்கணபதி, எம். ஏ.,

## தமிழின் உயிர்ப்பாற்றல் :

மனித இன நாகரிகவரலாறு, பெரும்பாலும் மொழி வளர்ச்சியோடு தொடர்புடையது. பல்லாயிரம் ஆண்டுக் காலச் சிந்தனைகள் மொழியில் தேங்கிக் கிடக்கின்றன. மொழியின் பெருமைகள் எல்லாம் அதன் சொற்றொகுதியில் மறைந்திருக்கின்றன. காலவெள்ளத்தில் சொற்கள் பெற்று வந்திருக்கும் மாறுபட்ட வடிவங்கள் சுவைமிக்க வரலாறுக விரிக்கத்தக்கன. தொன்மையான இலக்கியப் பெருமிதத்தில் நிமிரும் மொழிகளுக்கு இவ்வரலாறு இன்னும் சிறக்கும். தமிழின் இலக்கியவளம், அதன் சொல்லாய்வில் பல்வேறு வியப்புக்களை வழங்குகின்றது. பழையன கழியப் புதியன புக வளரும் வளர்ச்சி உயிர்ப்புடைய வளர்ச்சி. தமிழில் இவ்வுயிர்ப்பாற்றல் மிகுதி. ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகள் கடந்தன. சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய தேவாரத்தை நோக்குகின்றோம். சொற்றமிழ் பாடவந்த அத்தூயோரின் அருள் வாக்கில் அரிய சில சொல்லாட்சிகள் நம்மை நிற்க வைக்கின்றன. இன்று அத்தகு சொற்கள் வழக்கில் இல்லாதிருக்கலாம். வருங் காலத் தேவைகளுக்கு அவை துணை நிற்கக் கூடும்.

## புரியாத ‘கிறி’ :

திருநாகைக் காரோணத்துப் பெருமானைப் பாடுகிறார் சுந்தரர். இறைவனது பிட்சாடனர் கோலத்தை நினைவூட்டுகிறது முதற்பாட்டு,

> “ பத்தூர்புக் கிரந்துண்டு பலபதிகம் பாடிப்
> பாவையரைக் கிறிபேசிப் படிறுடித் திரிவீர் ”

என இறைவன் விளிக்கப் பெறுகிறான். ‘கிறி’ என்ற சொல் நம் சிந்தையில் ஊன்றுகிறது. சோறிடவரும் இளமகளிர்பால் பொய் கூறி வஞ்சகமாக உணவு பெறுவது இரவலர் இயல்பு. கிறி என்ற சொல் ‘பொய்’ என்ற பொருளில் வருவதாகத் தெரிகிறது.

வேறு ஒரு இடம்; நரி கிழித்துண்ணும் உடம்பினைச் சுமந்து அறஞ் செய்யாத மானிடர்களைப் பார்த்து வருந்திய நாவலூராளி 'கேதாரம்' என்றுவது ஒருமுறை கூறுங்கள் என்று அறிவுறுத்துகின்றார். அழகிய பாட்டு அது.

" பறியேசுமந் துழல்வீர்பறி நரிகீறுவ தறியீர்
குறிகூவிய கூற்றங்கொளு நாளால் அறம் உறவே
அறிவானிலும் அறிவான்நல நறுநீரொடு சோறு
கிறிபேசிநின் றிடுவார்தொழு கேதாரமெ னீரே "

அது அறஞ் செய்வார் தொழும் கேதாரம். நல்ல நீரையும், சோற்றையும் இரவலர்களுக்குக் 'கிறி' பேசி இடுகின்றார்களாம் அவர்கள் இங்கே 'கிறி' என்ற சொல்லின் பொருள் வேறுபடுகிறது. உணவிடுவார் பேசும் இன்சொல்லைப் பெருமான் 'கிறி' என்ற சொல்லால் குறித்திடக்கண்டு, புதிய கருத்து வரவினைப் பெற்று மகிழ்கிறது நெஞ்சம். திருப்புக்கொளியூர் அவிநாசிப் பதிகத்தில் சுந்தரர்மீண்டும் இச்சொல்லை வழங்குகின்றார். குளத்தில் மூழ்கிய அந்தணச் சிறுவன், பல ஆண்டுக்காலம் வெளிப்படாதிருந்து பின் வெளிப்பட்டனனே! அவன் அவ்வாறு மறைந்திருக்கச் செய்த மாயம் என்னை என வினாத்தொடுப்பார்போல,

" புள்ளேறு சோலைப் புக்கொளி யூரிற் குளத்திடை
உள்ளாடப் புக்க மாணியென் னைக் கிறி செய்ததே "

என்கிறார். இங்கே 'கிறி' என்ற சொல் 'மாயம்' என்ற பொருள் தந்து புதிய வளம் காட்டுகிறது. இவ்வாறு 'பொய்யுரை' எனவும் 'இன்சொல்' எனவும், 'மாயம்' எனவும் வெவ்வேறு பொருள்களை வழங்கும் ஆற்றல் மிக்க சொல் இன்று பேச்சு வழக்கிலும் இல்லை; செய்யுள் வழக்கிலும் இல்லை; திவ்யப் பிரபந்தத்தில் 'மூவடி மண்வேண்டிச் சென்ற பெருங்கிறி' என்ற தொடரில் 'தந்திரம்' என்ற பொருளிலும், பெயர்ச் சொல்லாக அதே நூலில் 'கிண்கிணிகட்டி, கிறிகட்டி' என்றவிடத்து குழந்தைகள் முன்கையில் அணியும் பவளவடம்' என்ற பொருளிலும் இச்சொல் வழங்குதலைக்காணலாம். 'கேட்டாயோ தோழி, கிறி செய்தவாறொருவன்' என்ற திருவாசகத் தொடர் அறிந்த தொடரேயாகும்.

**களேபரக் கதை :**

அங்கு என்ன ஒரே களேபரமாக இருக்கிறது என்று இன்று பேசக் கேட்கிறோம். ஆரவாரத்தை அவ்வாறு குறிப்பிடுவது

தற்காலப் பேச்சுவழக்கு. 'களேபரம்' என்ற அரிய சொல் சுந்தரர் தேவாரத்தில் இடம் பெறுகிறது. வலிவலத்திறைவனை

" ஏன்ற அந்தணன் தலையினை அறுத்து
நிறைக்க மால்உதி ரத்தினை ஏற்றுத்
தோன்று தோள்மிசைக் களேபரந் தன்னைச்
சுமந்த மாவிர தத்தகங் காளான் "

என்கிறார். இங்குக் களேபரம் என்ற சொல் 'எலும்புக் கூடு' என்ற பொருளில் வருகிறது. 'இக்களேபரத்தை ஓம்ப' எனத் தேவாரத்தில் இச்சொல் இதே பொருளில் வழங்குகின்றது. ஆனால் வழக்கில் இச்சொல் ஆரவாரம் அல்லது குழப்பம் என்ற பொருளில் வழங்குகின்றது. 'களேவரம்' என்ற சொல்லுக்கே குழப்பம் என்பது பொருள். களேவரம் களேபரமாக மாறி உண்மைப் பொருளை மறைத்துவிட்டவரலாற்றைச் சுந்தரர் தேவாரம் காட்டுகிறது.

## சொத்தையா? கொத்தையா?

ஆரூர்ப் பெருமானோடு கொண்டிருந்த சுந்தரரின் உறவுக்கு எல்லையே தும் இல்லை. ஒற்றியூர் எல்லையில் கண் இழந்து, காஞ்சியில் இடக்கண் பெற்றுத் திருவாரூர் இறைவனோடு உரிமைப் போரிடுகிறார் சுந்தரர்.

" விற்றுக் கொள்வீர் ஒற்றி யல்லேன் விரும்பி ஆட்பட்டேன்
குற்றம் ஒன்றுஞ் செய்ததில்லை கொத்தை யாக்கினீர் "

குற்றமிழையாதிருக்கவும், எளியேனைக் 'கொத்தை' ஆக்கியது எதனால் என்கிறார். 'கொத்தை' என்ற புதுச் சொல்லில் தானே நமக்கு நாட்டம், இச் சொல் 'குருடன்' என்ற பொருளை விளக்கி நிற்கிறது. நாவழங்காதானை ஊமை என்றல் போல், பார்வை இல்லானைக் 'கொத்தை' என்று வழங்கும் சொல்வழக்கு தேவாரத்தில் விருந்தாகிறது. தேவாரத்தில் இதே பொருளில் 'கொத்தைக்கு மூங்கர் வழிகாட்டுவித்து' என வேறு இடத்திலும் வருகிறது. கொத்தை என்ற இச் சொல்லுக்கு, சொத்தை, ஊனம் அரைகுறை என்ற வேறு பொருள்களும் குறிக்கப்படுகின்றன. 'வெந்தது கொத்தையாக வாயிலிடுமா போல' என பிரபந்த ஈடு உரையில் அரை குறை என்ற பொருளில் இச் சொல் பயில்கிறது. இவ்வரிய சொல்தான் பயனற்றது என்ற பொருளில் 'சொத்தை' என மருவிற்றோ என எண்ணவேண்டி

யுள்ளது நமது சாத்திர நூலுள் ஒன்றாகிய சங்கற்ப நிராகரணத்தில், அஞ்ஞான முடைய மக்களைக் 'கோத்தை மாந்தர்' என உமாபதிசிவம் குறிப்பிடுகிறார். 'பாவி' என்ற பொருளும் இதற்கு உண்டு. 'கோத்தை போல் நிரயக் குழி கூடுவார்' என்கிறது சிவதருமோத்திரம்.

சகளி என்னும் சாத்திரச் சொல் :

தருமை யாதீன அருளாட்சியில் திகழ்வது திருநின்றியூர். இத்தலத்திற்குரிய சுந்தரர் தேவாரம் அரிய பல செய்திகள் கூறுவது. அகத்தியனுக்கு அருளிய கருணையினை வியக்கும் ஒரு திருப்பாட்டில்

' சந்தி மூன்றிலும் தாபரம் நிறுத்திச்
சகளி செய்திறைஞ் சகத்தியன் தனக்குச்
சிந்து மாமணி யணிதிருப் பொதியிற்
சேர்வு நல்கிய செல்வங்கண் டடைந்தேன் "

என்று தன்னிலை விரிக்கிறார். 'சகளி' என்ற சொல் நீண்ட சிந்தனைகள் பலவற்றை உண்டாக்குகின்றது. சகளம் என்ற சொற்குக் கலையொடு கூடியது என்பது பொருள். அச்சொல்லே ஈறுகெட்டு இகர விகுதி புணர்ந்து 'சகளி' என நின்றது என்பர். எனவே, சகளி என்பது 'கலைகளை உடைய திருமேனி' எனப் பொருள்பட்டு, இலிங்கத் திருமேனியில் கலையுருவத்தைப் பாவனையால் அமைத்துக்கொண்டது' என்ற விளக்கத்தோடு நிறைகிறது. 'சகளம்' என்ற சொல்லுக்கே உருவத் திருமேனி என்ற பொருள் உண்டு என்பதனை 'சகளமாய் வந்ததென் றுந்தீபற' என்ற சாத்திர வாக்கால் அறியலாம். எனவே சகளன் என்ற சொல் - உருவத் திருமேனி கொண்ட சிவன் எனப் பொருள்படுகிறது. சகளி என்ற சொல்பற்றிய விரிவான ஆய்வினை ஆதீன வெளியீட்டில் காணலாம். சமய நுட்பம் வாய்ந்த இச் சொல்லை இன்று காணக்கூட வில்லை.

கண்மூடிய நிலைக்கு ஒரு புதிய சொல் :

'சிம்புளித்தல்' என்ற அழகியசொல்லைத் திருக்கருப்பறியலூர் தேவாரத்தில் சந்திக்கின்றோம்'.

'சிம்மாந்து சிம்புளித்துச் சிந்தையினில் வைத்துகந்து...' எனத் தொடர்கிறது முதற் பாடல். கண்களைச் சிறிது மூடி யிருத்தலை இச் சொல் விளக்குகின்றது. இறைவன் சந்நிதியில்

நின்று மூன்றிலும் மூடாமலும், திறக்காமலும் நோக்கி இறைஞ்சும் கட்பார்வை நிலையினை இச்சொல் குறிக்கிறது. அச்சம், மகிழ்ச்சி முதலியவற்றால் கண்ணை மூடிக்கொள்ளும் ஒரு நிலையே இது எனத் தெரிகிறது. 'சிறக்கணித்தல்' என்ற திருக்குறட்சொல் ஒன்றை இதனோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம். இவ்வரிய சொல்லை வழிபாட்டு நிலை பற்றிய விளக்கங்களில் ஆட்சிக்குக்கொண்டு வந்து வழங்க இயலும்.

**வேர்ச்சொல் அறியாச் சோத்தம் :**

தாழ்ந்தோர் உயர்ந்தோரிடம் கூறும் வணக்கச் சொல்லைக் குறிக்கும் ஒரு அரிய சொல்லாட்சியைத் திருப்பரங்குன்றத் தேவாரத்தில் காணுகின்றோம்.

"சோத்திட்டு விண்ணோர் பலரும் தொழ ... ..."

என்ற தொடரில் வரும் சோத்திட்டு என்ற ஆட்சி "சோத்தம்" என்ற சொல்லின் திரிந்த வடிவேயாகும். இச்சொல் அம் ஈறு இன்றிச் "சோத்து" எனவும் வழங்குவது உண்டு. இழிந்தோர் செய்யும் அஞ்சலியினை உணர்த்தும் இச்சொல்லைத் திவ்வியப் பிரபந்தம் "சோத்தம் நம்பீ! என்று தொண்டர் அழைக்கும்" என ஆள்கிறது. இச்சொல்லின் மூல வடிவத்தை உணர இயல வில்லை. வேறு ஓரிடத்திலும் இச்சொல்லாட்சி வருகிறது. "ஈ" என்பது இழிந்தோன் உயர்ந்தோனை நோக்கிக் கூறும் இரத்தல் சொல்லாதல் போல, பணிவு குறித்த சொல்லாகிறது சோத்தம்.

(தொடரும்)

---

## ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி குருபூஜை விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் குருபூஜை விழா நிகழும் பிங்கள ஆண்டு ஐப்பசித் திங்கள் 19 ஆம் நாள் (4—11—77) வெள்ளிக்கிழமையன்று அவர்களது குருமூர்த்த ஆலயத்தில் சிறப்பாக நடைபெறும். அன்று விசேட அபிடேக ஆராதனைகளும் மகேசுவர பூஜையும் சிறப்பாக நடைபெறும். அன்று சமய விரிவுரைகளும் நிகழும். சைவ அன்பர்கள் வந்து கண்டும் கேட்டும் பயன் பெறுவார்களாக.

கடிதம்

(ஞானசம்பந்தம் - ஆவணிமாத இதழில் வெளிவந்த மனத்தைக் கவர்ந்த மணிவிழா' என்ற தலைப்பில் வந்த செய்தியைக் கண்டு மகிழ்ந்து தெரிவித்துக் கொள்ளும் நன்றிக்கடிதம்.)

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பொற்பாதங்களுக்கு அடியேனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குரு ஆசியினாலும், இறை திருவருளாலும் குரு, லிங்க, சங்கம வழிபாட்டு முறையில் அடியேனது மணி விழா யாதொரு குறையுமின்றி நிறைவாக நடைபெற்றது. குருமகா சந்நிதானம் அடியேனுக்கு ஆசிகூறியபடி மென்மேலும் மக்கள் தொண்டும், மகேசன் தொண்டும், மாகேஸ்வரர் தொண்டும் இயன்றவரை வழுவாது செய்து வருவேன் என்று பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மகாசந்நிதானத்தின் பொற்பாதங்களுக்கு
அடியேன்,
S. விஸ்வநாதன்.

மாயூரம்
23—9—77.

---

# தருமை ஆதீனம்
## 26-ஆவது குருமகாசந்நிதானம் அவர்கள்
# ஞானபீடம் அமர்ந்தநாள் விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஞானபீடம் அமர்ந்தநாள் விழா நிகழும் பிங்கள ஆண்டு ஐப்பசித்திங்கள் 21 ஆம் நாள் (6—11—77) ஞாயிற்றுக்கிழமையன்று தருமை ஆதீனத்தில் சிறப்பாக நடைபெறும். அன்று ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் ஏகாதச ருத்ர ஜபம், வேள்வி இவற்றுடன் விசேஷ அபிடேக ஆராதனைகள் அர்ச்சனைகள் முதலியனவும் பன்னிரு திருமுறைப் பாராயணமும் நடைபெறும். அன்று நண்பகல் மாகேஸ்வர பூஜையும் நிகழும். சைவ மெய்யன்பர்கள் வந்து வழிபட்டுப் பயன் அடைவார்களாக.

உ

குருபாதம்

# ஸ்ரீ மெய்கண்டார் குருபூஜைத் திருநாள் விழா

இறைவனை அடையும் நெறிகளை அன்புநெறி என்றும், அறிவுநெறி என்றும் இரண்டுவகையாகக் கூறுவர். அன்புநெறியினைத் தோத்திரத்தின் வழியாகவும், அறிவுநெறியினைச் சாத்திரத்தின் வழியாகவும் போதிப்பதுண்டு. சாத்திரங்களை அருளிச் செய்தவர்கள் சந்தானாசாரியர்கள் ஆவர். இச்சந்தானாசாரியர்களில் முதன்மையானவர் 'சிவஞானபோதம்' என்னும் சாத்திர நூல் அருளிச் செய்தவராகிய ஸ்ரீ மெய்கண்டார் ஆவர். ஸ்ரீ மெய்கண்டாரின் குருபூஜைத் திருநாள் நிகழும் பிங்கள ஆண்டு ஐப்பசித் திங்கள் 25 ஆம் நாள் (10—11—77) வியாழக் கிழமையன்று சிறப்பாக நடைபெறும். இவ்விழா தருமை ஆதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலிலும், ஸ்ரீ மெய்கண்டாரின் அவதாரத்தலமாகிய திருப்பெண்ணாகடத்திலும் அவர் முத்திப்பேறடைந்த தலமாகிய திருவெண்ணெய் நல்லூரிலும் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பாக நிகழ்வுறும். ஆங்காங்கும் சமய விரிவுரைகள் நிகழும். சைவ அன்பர்கள் வந்து கண்டும் கேட்டும் பயனடைவார்களாக.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam


Sri Amirthagateswaraswamy Devasthanam, Tirukkadaiyur.

I have wonderful darsan of the Lord and also Goddess Abirami at the great temple at Thirukadaiyur with all the officers of the I. T. Dept. in Nagapattinam.

(Sd.) A. K. R. Prabhu,

Commissioner, Income Tax

26—9—77. Madras.



ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள், சென்னை, திரு சி. பாலகிருஷ்ண முதலியாரவர்களின்

## தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திரு. சி. பாலகிருஷ்ண முதலியார் பேரனுக்குப் பெயர்சூட்டியருளல்

சென்னை. திரு. சி. பாலகிருஷ்ண முதலியார் அவர்களும், அவர்கள் துணைவியார் திருமதி. சரஸ்வதி அம்மாள் அவர்களும், தங்கள் திருமகன், திரு. சண்முகம், மருமகள் திருமதி. மைதிலி ஆகியோருடனும், தங்கள் புதல்வியும், மாயூரத்தில் விளங்கும் தருமபுரம் ஸ்ரீ ஞானாம்பிகை அரசினர் மகளிர் கலைக்கல்லூரி முதல்வருமாகிய செல்வி. சி. பார்வதி அவர்களுடனும் தருமையாதீனத்திற்கு வந்து ஸ்ரீ சொக்கநாதப்பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் செய்வித்தும், ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களைத் தரிசித்தும், தங்கள் குலக்கொழுந்தாகத் தோன்றிய செல்வனுக்கு (பேரனுக்கு) ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களிடம் நாமகரணம்செய்வித்தருளுமாறுவேண்டிக்கொண்டனர். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் சொக்கநாதன் எனப் பெயர்சூட்டிக் குழந்தைக்கு ஆசியருளினார்கள்.

---


# "ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்"

(மாதப் பத்திரிகை)

* கடந்த 57 ஆண்டுகளாக-தமிழகத்தின் சமய வளர்ச்சிக்காக-ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனின் சார்பாகத் தமிழில்வெளிவருகிறது.
* மகான்களின் வாழ்க்கையில் நடைபெற்ற சுவையான நிகழ்ச்சிகள், அன்றாடவாழ்க்கையில் மதத்தைக்கைக்கொள்ள வேண்டிய வழிமுறைகள், சாஸ்திரங்களின் உட்பொருள் விளக்கங்கள், ஆத்ம தத்துவம் குறித்த ஆராய்ச்சி, உபநிஷத உண்மைகள், இதிகாசங்கள், பக்தி, வேதாந்தம், சைவ சமயக் கருத்துக்களைக்கொண்டது.
* ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் குரலாக விளங்கி மத உண்மைகளைப் புகட்டுகிறது. உங்கள் உள்ளம் உயர, நீங்கள் ஹிந்து மதத்தை உள்ளபடியே புரிந்துகொள்ள அவசியம் படிக்கவேண்டிய பத்திரிகை இது.

சந்தா விபரம்

வருட சந்தா : ரூ. 7-00 ... ஆயுள் சந்தா : ரூ. 100-00

ஆயுள் சந்தாவைப் பகுதி பகுதியாகவோ, மாதம் ரூ. 10 ஆகவோ, மொத்தமாகவோ பின்வரும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

இராமகிருஷ்ண விஜயம் காரியாலயம்,
ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,
மயிலாப்பூர், சென்னை - 600004.

# திருமழபாடி, திருக்கானூர்த் தலச் சிறப்புக்கள்

தருமையாதீனத் தமிழ்ப் புலவர்,

**வித்துவான். திரு. வி. சா. குருசாமிதேசிகர் எம். ஏ.,**

( மலர் 35. இதழ் 10. பக்கம் 509 - இன் தொடர்ச்சி )

**வைரத்தூணநாதர் :**

மூலலிங்கம் புருஷாமிருக முனிவரால் பிரதிஷ்டை செய்யப் பெற்றது. முனிவர் தேசுபரவும் ஒரு சிவலிங்கத்தைத் தேடிப் பிரதிஷ்டை செய்ய விரும்பினார். பிரமன் உலகத்தில் அத்தகைய சிவலிங்கம் இருப்பதறிந்து வேண்டினார். பிரமன் தரமறுத்தான் ; முனிவர் தவம் செய்தார். அத்தவத்திற்கிரங்கிய பெருமான் பிரமனுலகத்திலிருந்து மண்ணுலகிற்கு வந்து பூமியைப் பிளந்து வயிரத் தூணாக எழுந்தருளினார். மிருகர் மகிழ்ந்தார். பிரமன் சிவலிங்கத்தைக் காணாது பூமிக்குவந்து மிருகரோடு பூசலிட்டு, சிவலிங்கத்தைப் பெயர்க்க முற்பட்டான். பெருமான் சிவலிங்கத்திலிருந்து வெளிப்பட்டு முனிவரின் தவத்திற்கிரங்கித் தாமே இங்கு வந்ததாகவும் பிரமனை இங்குவந்து வழிபடுமாறும் கூறி மறைந்தருளினார்.

**வைத்தியநாதர் :**

சந்திரன் தன் மனைவியர் இருபத்தெழுவரில் உரோகிணியிடம் மிக்க நேசம் கொண்டொழுகினான். எஞ்சியோர் தங்கள் தந்தையாகிய தக்கனிடம் முறையிட்டனர். தக்கன் சந்திரனைக் கயரோகத்தால் வருந்திக் கலைகளை இழக்கும்படிச் சபித்தான். சாபம் பெற்ற சந்திரன் இத்தலத்திற்கு வந்து பெருமானை வழிபட்டு நோய் நீங்கப்பெற்றான். பெருமான் சந்திரனைத் திருமுடியில் ஏற்று அருள் வழங்கினார். சந்திரனுடைய நோயை நீக்கியதால் வைத்தியநாதர் என வழங்கப் பெற்றார்.

## மழுவாடீசர் :

பதஞ்சலி வியாக்கிரபாதரைப் போல மார்க்கண்டேய முனிவரும் இறைவனது திருநடனத்தைக்காண விழைந்து தவம் செய்தார். பெருமான் இவரது தவத்திற்கு இரங்கி வைகாசி விசாகத் திருநாளில் மழுவேந்தி நடம் புரிந்தருளினார். ஆதலின் பெருமான் மழுவாடீசர் எனப்பெற்றார். 'கையில் ஏந்திய மழு வினன் உறையும் மழபாடி' என ஞானசம்பந்தர் மழுவேந்திய மழுவாடீசரைக் குறித்தருளுகின்றார்.

## நந்திதேவர் திருமணம் :

மகப்பேறின்றி வருந்திய சிலாத முனிவர் இறைவனை வழிபட்டார். "அப்போது ஐயாறப்பர், 'நீ புத்திரகாமேட்டியாகம்செய்து பூமியை உழுதால் பெட்டகம் தோன்றும். அதில் புத்திரன் காணப்படுவான். அவனுக்கு வயது பதினாறு என்று" அருளினார். யாக முடிவில் பூமியை உழுங்கால் ஒரு பெட்டகம் அகப்பட்டது. அதைத் திறந்து பார்த்தபோது நான்கு தோளும் மூன்று கண்ணும் உடைய ஒரு சிவமூர்த்தி காணப்பட்டார். 'பெட்டியை மூடித்திற' என்ற அசரீரிப்படி பெட்டியை மூடித் திறந்தபோது அழகிய குழந்தை வடிவம் தோன்றியது. முனிவர் அக்குழந்தைக்குச் செப்பேசன் எனப் பெயர் சூட்டி அன்போடு வளர்த்தார். பதினான்கு வயதில் செப்பேசன் கலைஞானங்கள் நிரம்பப் பெற்றார். இன்னும் இரண்டு ஆண்டுகளில் செப்பேசரை இழக்க நேருமே என்று முனிவரும் அவர் துணைவியாரும் வருந்தினர். அதனை அறிந்த செப்பேசர் ஐயாறப்பர் ஆலயமடைந்து அயனரி தீர்த்தத்தில் காலை ஊன்றிக் கடுந்தவம் புரிந்தார். பல நாட்களாயின. அவரது காலை மீன்களும் பாம்பும் அரித்துத் தின்றன. இறைவன் காட்சியளித்து வேண்டும் வரங்களை நல்கினார்.

இறைவன் செப்பேசரது எற்புடம்பை நலமுறச் செய்வித்தற் பொருட்டு கங்கை நீர் முதலிய ஐவகைத் தீர்த்தங்களினால் அபிடேகம் செய்தார். செப்பேசர் உடல் ஊறு நீங்கினார். ஒளி மயமாகத் திகழ்ந்தார்.

சிலாத முனிவர் திருமழபாடியில் தவம் செய்து வதிந்த வசிஷ்ட முனிவரின் பேத்தியும் வியாக்ரபாதருடைய மகனும் உபமன்யு முனிவரின் தங்கையுமான சுயசாதேவியைத் தம் புதல்வருக்குப் பங்குனி மாதப் புனர்பூச நக்ஷத்திரத்தன்று

திருமணம் செய்வித்தார். பின் செப்பேசர் திருக்கயிலையில் சிவகணங்களின் தலைவராம் நிலையையும், முதல் திருவாயிலில் நின்று காக்கும் உரிமையையும், முதற் குருவாம் தன்மையையும் பெற்ஞர். சிலாதமுனிவரின் புதல்வராய்த்தோன்றியவர் திருநந்தி தேவராவார். இவரது திருமணவிழா திருமழபாடியில் ஆண்டு தோறும் நிகழ்கிறது. ஐயாறப்பரும் இவ்விழாவிற்கு எழுந் தருளிச் சிறப்பிப்பர்.

இக்கோயிலில் நவக்கிரகங்கள் இல்லை. அதற்குப் பதிலாக சுவாமி சந்நிதியில் மூன்று குழிகள் உள்ளன. சிபிச்சக்கரவர்த் திக்கு நவக்கிரகதோஷம் போக்கிய தலம்.

இலக்கியம் :

இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம் மூன்றும், திருநாவுக்கரசு சுவாமிகளின் திருத்தாண்டகப் பதிகங் கள் இரண்டும், சுந்தரர் அருளிய பதிகம் ஒன்றும் ஆக ஆறு திருப்பதிகங்கள் உள்ளன.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாலம்பொழிலில் இறைவனை வணங்கித் தங்கியிருந்த காலத்தில் இறைவன் அவர் கனவில் தோன்றி "மழபாடிக்கு வர மறந்தனையோ" என்று கூறி நினைப் பிக்க எழுந்த சுந்தரர் திருமழபாடிக்கு எழுந்தருளி, புகழ்பெற்ற பதிகமாகிய "பொன்னூர் மேனியனே" என்ற திருப்பதிகத்தை அருளிச்செய்து வழிபட்டார். பாடல்கள்தோறும் "மழபாடியுள் மாணிக்கமே உன்னையல்லால் இனி யாரை நினைக்கேன்" என அருளிச் செய்துள்ளார்.

இத்தலத்திற்கு நமது தருமையாதீன ஆதி பரமாசாரியர் ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகளின் ஞானுசாரியராகிய ஸ்ரீ கமலை ஞானப்பிரகாச தேசிகர் அவர்களால் இயற்றப்பட்ட தலபுராணம் ஒன்று உள்ளது. இயற்றியகாலம் சகம் 1487 ஆகும்.

கல்வெட்டு :

இக்கோயிலில் சோழர், பாண்டியர், ஹொய்சலர் ஆகியோரது முப்பது கல்வெட்டுக்கள் படி எடுக்கப்பட்டுள்ளன. ஹொய்சலர் கள் கண்ணனூரைத் தலைநகரமாகக் கொண்டிருந்ததால் இந்த ஊரில் அவர்களின் கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அவைகளில் சிங்கண தண்டநாயகன் முதலிய படைத்தலைவர்களின் பெயர்கள்

இக்கல்வெட்டுக்களில் வருகின்றன. அவர்களுக்குமுன் பாண்டியர்கள் வந்திருக்கின்றனர். ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் 19—7—1261, 29—10—1253, 19—4—1253 ஆகிய நாட்களில் கல்வெட்டுக்கள்வைத்துள்ளான். இங்கு இராசராசன், இராசேந்திரன், இராசாதிராசன், முதலாம் குலோத்துங்கன் 2-ஆம் 3-ஆம் குலோத்துங்கன் ஆகியோரது கல்வெட்டுக்கள் இருக்கின்றன. சோழர்களில் ஒரு அரசன் இருக்கும்போதே மற்றவன் ஆளத்தொடங்கியதை அறிகிறோம். இராசேந்திரன் காலத்திலேயே இராசாதிராசன் பட்டம் எய்தினன் என ஒரு கல்வெட்டால் தெரிகிறது. இராசேந்திரன், இரண்டாம் கிருஷ்ணன் ஆகியோர் கோயிலுக்குப் பொன், வெள்ளிப் பாத்திரங்கள் அளித்துள்ளார்கள். இக்கோயிலுக்குப் பல அரசிகளும் தானஞ் செய்திருக்கிறார்கள். ஹொய்சள அரசன் நரசிம்மன் காலத்தில் ஒருவன் ஒருகோயிலைக் கட்டிய செய்தியை இங்கு உள்ள கல்வெட்டினால் அறிகிறோம்.

## திருக்கானூர்

சோழவள நாட்டில் காவிரியின் வடகரைத் தலங்களில் 56-வது தலமாகத் திகழ்வது திருக்கானூர். இத்தலம் பூதலூர் இரயில் நிலயத்திலிருந்து வடக்கே 7 கி. மீட்டர் தூரத்திலும், பேருந்து வழியில் திருக்காட்டுப்பள்ளிக்கு வடக்கே 4 கி. மீட்டர் தூரத்திலும் உள்ளது. திருக்காட்டுப்பள்ளிக்கு அருகில் காவிரியணையின் வடபால் 1. கி. மீட்டர் தூரத்தில் விஷ்ணுப்பேட்டை உள்ளது. அங்கிருந்து திருக்கானூருக்கு மாட்டு வண்டிகள் மட்டுமே செல்வதற்குரிய மட்சாலை உள்ளது. பேருந்து வழியே சென்றால் திருக்கானூரை அடையலாம். திருக்கோயில் கொள்ளிடக்கரையில் உள்ளது.

### தலப்பெருமை :

அம்பிகை இத்தலத்தில் சிவயோகத்தில் அமர்ந்திருந்தபோது இறைவன் அனற்பிழம்பாகத் தோன்றிக் காட்சி தந்தருளினன். அதனால் சுவாமி செம்மேனிநாதர் என்றும் அம்பிகை சிவயோக நாயகி எனவும் வழங்கப்பெற்றனர்.

கானகத்தில் அமைந்த கானூர் என்ற ஊரில் செழுஞ்சோலைகளினிடையே முளைத்தெழுந்த இறைவன் திருவுருவத்தைக் கானூர்முளை என்று போற்றுகின்றார் திருநாவுக்கரசர். 'காமற் காய்ந்தவன் கானூர் முளைத்தவன்' என்றும், 'கருவனுகி முளைத்

தவன் காறூரில் ' என்றும், ' கண்டுகொண்பின் நீர் காறூர் முளைமினை' என்றும் கூறியருளுகின்றார். சுந்தரர் ஊர்த் தொகையில்,

" மருகல் உறைவாய் மாகாளத்தாய் மதியஞ்சடையானே
அருகற் பிணிநின் னடியார்மேல வகல அருளாயே
கருகற் குரலாய் வெண்ணிக் கரும்பே காறூர்க்கட்டியே
பருகப் பணியாய் அடியார்க்குன்னைப் பவளப்படியானே "

எனக் கூறியருளுகின்றார். சுவாமி கரும்பேசுவரர் எனவும், அம்பிகை சிவயோக நாயகி எனவும் வழங்கப்பெறுகின்றனர்.

கோயிலமைப்பு :

திருக்காறூர் மிகச்சிறிய கிராமம். கொள்ளிடத்தில் பரிசில் விடுவோரும் மீன் பிடிப்போருமே இவ்வூரில் உள்ளனர். இங்கிருந்த குடிமக்கள் கொள்ளிட வெள்ளப் பெருக்கிற்கு அஞ்சி இடம் பெயர்ந்து தெற்கே குடிபெயர்ந்தனராதல் வேண்டும். கோயில் கொள்ளிடத்தின் தென்கரையில் சாலைக்குக் கிழக்கே ½ கி. மீட்டர் தூரத்தில் உள்ளது. ஒரு காலத்தில் கோயில் மண் மேடிட்டுவிட்டதென்றும், மாடுகள் மேய்த்து விளையாடும் சிறுவர்களால் கோயிற் கலசம் தட்டுப்பட்டுப் பின் கோயில் கண்டு பிடிக்கப்பெற்றது என்றும் கூறுகின்றனர். அண்மைக்காலத்தில் செய்த புதிய திருப்பணிகள் பலவற்றோடு கோயில் அழகுறத் திகழ்கிறது. கிழக்கு நோக்கிய சந்நிதி. மூன்று நிலை இராஜ கோபுரம் கோயிலின் அழகிற்கு அழகு சேர்க்கிறது.

இராஜகோபுரத்தைக் கடந்து உள்ளே சென்றதும் தெற்கு நோக்கி உள்ள அம்பாள் கோயிலைத் தரிசிக்கலாம். ஒரே பிராகாரம். திருமடைப்பள்ளி, கிணறு, நந்தவனங்கள் உள்ளன. மேற்குப் பிராகாரத்தில் விநாயகர், முருகன் கோயில்களும், வடக்குப் பிராகாரத்தில் துர்க்கை சண்டீசர் கோயில்களும் உள்ளன.

நந்தி பலிபீடங்களைக்கடந்து சுவாமிகோயிலுக்குள் நுழைந்தால் நால்வர், பைரவர், சாஸ்தா முதலிய திருவுருவங்கள் உள்ளன. சுவாமி அருள்மிகு அரும்பேஸ்வரர் என வழங்கப் படுகின்றனர். தேவாரத்தில் ' காறூர் முளை ' என்று குறிக்கப் பெறுகின்றார்.

அப்பர் சுவாமிகள் அருளிய திருக்குறுந்தொகைப்பதிகத்தில்,

" கல்வி ஞானக் கலைப்பொருள் ஆயவன்
செல்வம் மல்கு திருக்கானூர் ஈசனை
எல்லியும் பகலும் இசைவானவர்
சொல்லிடீர் நும் துயரங்கள் தீரவே "

என்றபாடலை ஓதி வழிபட்டு வெளியில்வந்து அம்பாள் சிவலோக நாயகியை வழிபாடு செய்கின்றோம்.

" எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர்தாம் விரும்பும்
உண்மை யாவது பூசனை எனவுரைத் தருள
அண்ண லார்தமை அர்ச்சனை புரியஆ தரித்தாள்
பெண்ணில் நல்லவ ளாயின பெருந்தவக் கொழுந்து "

என்ற பெரியபுராணப் பாடலை ஓதி வழிபடுகின்றோம்.

சூழவுள்ள தலங்கள் :

திருவையாறு தொடங்கிப் பல தலங்கள் இத்தலத்திற்குச் சூழவுள்ளன. திருக்கானூருக்கு மிக அண்மையில் தெற்கே திருக்காட்டுப்பள்ளியும், கிழக்கே திருவாலம்பொழிலும், வடக்கே அன்பிலாலந்துறையும் உள்ளன.

கல்வெட்டுக்கள் :

இத்தலம்வடகரை ராஜராஜவளநாட்டுப் பொய்கையூர் நாட்டு பணிபதிமங்கலமாகிய கரிகாலசோழ சதுர்வேதி மங்கலத்துத் திருக்கானூர் என்று குறிக்கப்படுகிறது. சுவாமிபெயர் இட்சுபரீஸ்வரர் என்று கல்வெட்டுக் குறிப்பாளர் எழுதுகிறார். கி. பி. 1268—1308 ஆண்ட மாறவர்மன் குலசேகரதேவன் ஏதோ நிபந்தம் அளித்திருக்கிறான். பெரியநப்பனை உத்தம சோழநாடாள்வான் கிராமக் காவலாக இருந்தான். இராஜாதிராஜ தேவனுடை நான்காம் ஆண்டுக் கல்வெட்டொன்றில் கரிகாற்சோழீச்சுரமுடைய மகாதேவர் கோயில் ஒன்று குறிக்கப்படுகிறது. இங்கே திருமேற்கோயில் என்னும் விஷ்ணுகோயில் இருந்ததைக் குறிப்பிடுகிறது.' *

---

* 164 of 1911.

# திருவாசகத்தில் சைவ சித்தாந்தம்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

திரு. ந.ரா. முருகவேள் M. A., M. O. L.,

(மலர் 36, இதழ் 10, பக்கம் 497 இன் தொடர்ச்சி)

**திரோதான சத்தி :**

(10) சைவ சித்தாந்த நூல்களில்; திரோதான சத்தி என்பதுபற்றி ஆங்காங்கேபேசப்படும். திரோதான சத்தியாவது உயிர்களைப் பற்றி நிற்கும் மும்மலங்களும் தத்தம் தொழில்களைச் செய்யுமாறு ஏவி இயக்குவது. உலகியல் வாழ்வில்நேரும் நன்மை தீமைகள் ஆகியவற்றை உயிர்கள் உணராதபடி மறைத்து வைத்து நுகர்விப்பது திரோதான சத்தியாகும். ‡

> " ஏயும் மும்மலங்கள் தத்தம் தொழிலினை இயற்ற ஏவும்
> தூயவன் தனதோர் சத்தி திரோதான கரியது "

என்பது சித்தியார் (57).

இங்ஙனம் மலங்களைத் தொழிற்படும்படி ஏவி இயக்கும் திரோதான சத்தியே, உயிர்களுக்கு மலபரிபாகம் வந்த பின்னர்

---

‡ " Heaven from all creatures hides the book of fate
All but the page prescribed, their present state;
From brutes what men, from men what spirits know:
Or who could suffe, being here below?
The lamb thy riot dooms to blood to-day,
Had he thy reason, would he skip and play?
Pleas'd to the last, he crops the flowery food,
And licks the hand just rais'd to shed his blood,
Oh, blindness to thi future kindly given
That each may fill the circle mark'd by Heaven,
Who sees with equal eyes, as God of all,
A hero perish, or a sparrow fall. "

—ALEXANDER POPE.

அநுக்கிரக சத்தியாக மாறி நின்று, எல்லா நலங்களையும் விளைவிக்கும். சேயின் குற்றம்கண்டு சினந்து கடிந்து ஒறுக்கும் தாயே, பிறகு அதன் நற்றம்கண்டு உவந்து, அன்பு செய்து நலம் புரிதல் போல்வது இஃது !

இவ்வாறு இறைவனின் திருவருள் ஆகிய அம்மையே, முதற்கண் மறைப்பாற்றலாக இருந்து, பின்னர் அருளாற்றலாக மாறி நலம் விளைவித்தலை,

“ முற்சினம் மருவு திரோதாயி கருணை ஆகித்
திருந்திய சத்திநி பாதம் திகழும் அன்றே ”

எனச் சிவப்பிரகாசம் என்னும் சித்தாந்த நூல் கூறும். முதலிற் சினம் மருவித் திரோதாயி என்னும் மறைப்பாற்றலாக இருப்பதே, பிறகு அந்நிலையின் வேறுபட்டு அநுக்கிரகசத்தி என்னும் அருளாற்றலாக மாறி நிற்கும் என்னும் சைவ சித்தாந்த உண்மைக்கு மூலமும் சான்றும் “ பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை ” எனவரும் திருவாசகத் திருவெம்பாவைத் தொடரே யாகும். திரோதான சக்தி உண்மையை விளக்குவதற்கு மதுரைச் சிவப்பிரகாசர் என்னும் பேருரையாசிரியர், இத்திருவாசகத் தொடரையே மேற்கோளாக எடுத்துக் காட்டியிருத்தல் காணலாம்.

ஐந்தொழில்கள் :

(11) உலகமானது அறிவில்லது ( அசேதனம், சடம் ), அறிவுடையது ( சேதனம், சித்து ) என இருதிறப்படும், பிற சமயங்கள் கூறும் ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்கள், அறிவும் உயிரும் அற்ற சடவுலகுக்கு மட்டுமே பொருந்தும். சேதனப் பொருள்கள் ஆகிய உயிர்களுக்கு அவை பொருந்தா. ஏனெனில் இறைவன் உயிர்களைப் படைப்பதும் இல்லை, அழிப்பதும் இல்லை. ‘ என்று நீ அன்று நான் ’ எனத் தாயுமானவர் பாடுவதற்கு ஏற்ப, உயிர்களும் இறைவனைப் போலவே அநாதி நித்தியப் பொருள்களாகும். ஆதலின் அறிவுடைப் பொருள்கள் ஆகிய உயிர்களின் நலம் கருதியே, இறைவன் மறைத்தல் அருளல் ஆகிய இரு தொழில்களைச் சிறப்பு முறையில் செய்கின்றான்.

சடவுலகத்துக்காக ஆக்கல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழில்களும் சித்துலகத்திற்காக மறைத்தல் அருளல் என்னும் இருதொழில்களும் ஆக, ஐந்து தொழில்களை இறைவன் முறையே இயற்றியருள்கின்றான் என்பது சைவ சித்தாந்தம்.

ஏதேனும் ஒன்றனைக் குறித்துக் கூறுங்கால், தொகை - வகை - விரி என மூவகையாற் கூறலாம். முத்தொழில் என்பது வகை. அதுவே தொகையாயின் பந்தம் வீடு என இரண்டாகவும் விரியாயின் மறைத்தல் அருளல் என்பனவற்றோடு சேர்த்து ஐந்தாகவும் கூறப்படும்.

இவ்வாறு, இறைவனின் ஐந்தொழிற்றிறம் குறித்துச் சைவ சித்தாந்த நூல்கள் விளக்குவதற்கு உரிய, அரிய சான்றாக அமைந்தது, திருவாசகத்திலுள்ள சிறந்த திருவெம்பாவைத் திருப்பதிகத்தின் இறுதிப்பாடலேயாகும்.

"போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம் (1)
போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள் (2)
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாம் இணையடிகள்; (3)
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்; (4)
போற்றியாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன் மலர்கள்" (5)

எனவரும் திருவெம்பாவை வரிகளையே, மதுரைச் சிவப்பிரகாசர் என்னும் சைவ சித்தாந்தப் பேருரையாசிரியர், இறைவனின் ஐந்தொழில் திறத்தினை விளக்கும் சிறந்த பெருமேற்கோளாக எடுத்துக் காட்டியருள்கின்றார். இதுபோன்ற செய்திகள் பலப் பல. அவை " விரிப்பிற் பெருகும்; தொகுப்பின் எஞ்சும் "

முடிவுரை :

இதுகாறும் 'சமுத்திரகலச நியாயம்' பற்றிக் கூறிவந்த வற்றால், திருவாசகத்திற்கும் சைவ சித்தாந்தத்திற்கும் உள்ள தொடர்பு இயைபுகளைத் 'தாலிபுலாக நியாயம்' கொண்டு ஓரள வேனும் நாம் உய்த்துணர்ந்து கொள்ளுதல் கூடும். இத்தகைய சிறப்புமிக்க திருவாசகத்தினையும் சைவ சித்தாந்தத்தினையும், தக்கவாறு போற்றிப் பயின்று பயன்கோடல், அன்பர்கள் அனை வருக்குமே உரிய தலையாய கடனாகும்.

---

## பார்வையாளர் குறிப்புக்கள்

### திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

### சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம்

கிருத்திகா பஜன் மண்டலியில் சுமார் 50 பேர்கள் வந்து திவ்யமான தரிசனம் கண்டோம். நிர்வாகத்தின் ஏற்பாடுகளுக்கு மிக்க மகிழ்ச்சி.

7—10—77. (S-d) தணிகைவேலன்.

# மெய்கண்ட நூல்கள்

( ஆராய்ச்சி முன்னுரை )

தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,
திரு. கு. சுந்தரமூர்த்தி எம். ஏ.,

( மலர் 36, இதழ் 10, பக்கம் 502 இன் தொடர்ச்சி )

**மெய்கண்டார் :**

திருப்பெண்ணாகடத்தில் அச்சுதகளப்பாளர் என்ற ஒருவர் இருந்தார். இவர் வேளாண்மரபினர். திருத்துறையூரில் வாழ்ந்த சகலாகமபண்டிதர் அருணந்திசிவாசாரியார் என்பார், இவர்தம் குலகுரு ஆவார். தமக்குப் பன்னாட்களாக மகப்பேறு இன்மையை இவரிடம் தெரிவித்தார். அவரும் அடங்கன் முறையில் கயிறு சாத்திப் பார்த்து அதன்வழி இறைவன் திருவுள்ளத்தை உணர்த்தி அருளினார். "பேயடையா பிரிவெய்தும்" எனத்தொடங்கும் திருஞானசம்பந்தர் தம் திருவாக்கின் வழி களப்பாளரும் அவர்தம் மனைவியாரும் திருவெண்காடடைந்து முக்குள நீராடி இறைவனிடத்துப் பாடு கிடந்தனர். இறையருளால் மகப்பேறு வாய்த்தது. அவ் அருமை மகவைத் திருவெண்காடர் (சுவேதவனப் பெருமாள்) எனப் பெயரிட்டு அழைத்தனர். தாய்மாமனின் ஊராகிய திருவெண்ணெய் நல்லூரில் வளர்ந்த இக்குழந்தைக்கு மூன்றாவதாண்டு தொடங்கியது.

திருக்கயிலையில் இறைவனிடத்திருந்து வழிவழியாக அருளுபதேசம் பெற்றவர்களில் நான்காமவரான பரஞ்சோதிமுனிவர் என்பார், தம் தவநெறியால் விண்வெளிச்செல்லும் பொழுது திருவெண்ணெய் நல்லூரில் இக்குழந்தை விளையாடிக்கொண்டிருப்பதைக் கண்டார். மெய்யுணர்வு கைவரப்பெறும் பக்குவமுடைய அக்குழந்தையிடம் வந்து அதற்கு உபதேசம் செய்து சைவ சித்தாந்த மெய்ப்பொருளை அனைவர்க்கும் விளங்குமாறு நூல்வடிவில் செய்தருளப் பணித்துத் தம் குருவின் பெயரான "சத்தியஞான தர்சினி" என்ற பெயரினையும் சூட்டினார். சத்தியஞான தர்சினி என்பதன் தமிழ்வடிவமே மெய்கண்டார் என்பதாகும்.

சிவஞானம்பெற்ற குழந்தையிடம் சிவஞானம் சித்திக்கப் பெற்றது. சிவம் பிரகாசிக்கவும் செய்தது. ஆதலின் குருமூர்த்தியால் பெற்ற மெய்யுணர்வை அனைவருக்கும் கூறியருளும் கடப்பாட்டில் நின்றார். மெய்கண்டார். இவர் தம்மரபிற்குக் குலகுருவாக இருந்த சகலாகமபண்டிதர் என்பார் இவர் தந்தையாரைக் காணவந்தார். இக்குழந்தை பாடம்சொல்லிவருவதையும் கேள்விப்பட்டு அவ்விடத்திற்குவந்தார். அதுபொழுது மெய்கண்டார் ஆணவ மலத்தின் இயல்பை விளக்கிக்கொண்டிருந்தார். சகலாகமபண்டிதர் அக்குழந்தையை நோக்கி ஆணவ மலத்தின் வடிவம்யாது? எனக்கேட்டார். அருளுணர்வில் தோய்ந்திருந்த அக்குழந்தை தம் வலக்கைச் சுட்டு விரலால் வினவியவரையே காட்டியது. அவ்வளவில் அருளுணர்வு கைவரப்பெற்ற சகலாகம பண்டிதர் இக்குழந்தை தம்மை ஆட்கொள்ளும் குருமூர்த்தியே என்றெண்ணி இவரை வணங்கினர். சிறிய பெருந்தகையாராக இருந்த இவரும் அவரை மாணுக்கராக ஏற்று அருளுபதேசம் செய்தருளினர்.

இவரிடம் மாணவராக இருந்தவர்கள் நாற்பத்துஒன்பதின்மர் ஆவர். தமக்குப்பின் சைவ சந்தான குரு பரம்பரையை வளர்த்துவரும்பணியை அருள் நந்திசிவாசாரியரிடம் வழங்கினர். பின் ஒரு ஐப்பசிச் சுவாதியில் அண்ணலார் சேவடிக்கீழ் அணைந்தருளினர். இவர் தம்வாழ்நாளில் திருவண்ணுமலைக்கு அருகிலுள்ள மர்த்தூரில் தம்பெயரால் ஒரு ஏரியையும், மெய்கண்டதேவேச்சுரம் என்ற ஒரு திருக்கோவிலையும் அமைத்தார் என்றும், நாள் வழிபாட்டிற்கென ஐந்துவேலி நிலத்தைத் தேவதானமாக வழங்கினர் என்றும் திருவண்ணுமலைத் திருக்கோவிலுள்ள மூன்றும் இராசராசனின் பதினுருவது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டுக் குறிக்கின்றது இவ்வரசனின் காலம் கி. பி. 1216 முதல் 1256 வரையாகும். எனவே இவரது காலமும் அக்காலமேயாகும்.

## அருள் நந்தி சிவாச்சாரியார் :

அருள் நந்தி சிவாச்சாரியாரின் பிற்பகுதி வரலாறு மெய்கண்டார் வரலாற்ருேடு இயைபுடையது. அது முன்னர்க் கூறப்பெற்றது. அவர்தம் முற்பகுதி வரலாறே ஈண்டுக் காணத்தக்கது. இவர் நடுநாட்டில் உள்ள திருத்துறையூரில் வாழ்ந்தவர். சிவாச்சாரியார் மரபில் தோன்றியவர். இளமையிலேயே வேத ஆகமங்கள் அனைத்தையும் ஓதியுணர்ந்தவர். ஆதலின் இவரைப் பலரும் சகலாகம பண்டிதர் என்றே

அழைத்தனர். இச் சிறப்புப் பெயரே காலப்போக்கில் இவர் தம் இயற்பெயரையும் மறக்கச்செய்தது. வேத சிவாகமங்களில் தோய்வுடையராதல் போலவே திருமுறைகளிலும் இவர் மிகவும் தோய்வுடையராய் இருந்தார். மகப்பேறு இன்றி வருந்திய களப்பாளருக்குத் திருமுறைவழி உய்தி கண்ட திறத்தால் இவ் வுண்மை விளங்கும்.

அச்சுத களப்பாளருக்கு மெய்கண்டார்தோன்றத் திருவருள் இவரைக் கருவியாகக் கொண்டமையும், அத்திருவருள் வழித் தோன்றிய மெய்கண்டாரே இவருக்குக் குருவாய் அமைந்தமையும் திருவருட் செயலே ஆகும். சீகாழியில் தம் மாணுக்கரோடு சிலகாலம் தங்கியிருந்தமையின் இவரைச் சண்பையர் தலைவர் எனவும் அழைத்தனர். சீகாழிக்கு உரிய பன்னிரு பெயர்களுள் சண்பை என்பதும் ஒன்று. இவரிடம் மாணுக்கராக இருந்த பலருள் மறைஞானசம்பந்தர் என்பாருக்கு ஞானசாரியத் தலைமை நல்கி ஒருபுரட்டாசிப் பூர நாளில் இவர் சிவானந்தப் பெருவாழ்வு அடைந்தார்.

### மறைஞான சம்பந்தர் :

இவர் பெண்ணுகடத்தினர். வேதிய மரபினர். இவர் தம் இயற்பெயர் ஞானசம்பந்தர் என்பதாகும். வேத ஆகமங்களை நன்கு ஓதியமையால் மறை என்ற அடைமொழி கூட்டப்பெற்று மறைஞான சம்பந்தர் என வழங்கப்பெற்ருர். அருள் நந்தி சிவாச்சாரியரிடம் உபதேசம் பெற்ற இவர் சிதம்பரத்திற்கு வட கிழக்கிலுள்ள திருக்களாஞ்சேரியை இடமாகக் கொண்டு வாழ்ந்தார். நாளும் கூத்தப்பெருமானை வணங்கிவரும்கடப்பாடு உடையவராயினுர். உமாபதி சிவத்திற்கு உபதேசித்தருளிய இவர் ஓர் ஆவணித்திங்கள் உத்திர நாளன்று வீடுபேறு அடைந்தார்.

### உமாபதி சிவாச்சாரியார் :

இவர் தில்லைப்பதியினர்; தில்லைவாழ் அந்தணர் என வழங்கப் பெறும் சைவ வேதிய மரபினர். கூத்தப்பெருமானுக்கு வழிபாடு செய்விக்கும் பேறு பெற்றவர். மெய்ந்நூற் பொருளை நன்கு உணர்ந்தவர். இத்தகைய தகுதி காரணமாக இவர் சிவிகையில் ஊர்ந்து செல்லும் இயல்பினராய் இருந்தார், திருக்களாஞ் சேரியில் வாழ்ந்து வந்த மறைஞானசம்பந்தர் ஒருநாள் தில்லைத் திருவீதியில் இவர் சிவிகையில் வரக்கண்டார். அப்பொழுது "பட்டமரத்தில் பகல் குருடு போகுது பார்' என அவர் கூறினுர்.

அதுவே சிவிகையில்செல்லும் உமாபதிசிவத்திற்கு அருளுரையாயிற்று. சிவிகையினின்றும் இறங்கிய உமாபதி சிவம் மறைஞான சம்பந்தரை வணங்கி அவரிடம் உபதேசம் பெற்றார். தில்லை மூவாயிரவர் இச்செயல் தகுதியற்றது எனக் கருதி தம் கூட்டத்திலிருந்து இவரை விலக்கி விட்டனர். உமாபதி சிவம் அதற்கு மனந்தளரவில்லை. நாடவர் பழித்துரை அவருக்குப் பூணாதுவாயிற்று. தில்லைக்கு அருகிலுள்ள கொற்றவன்குடியில் திருமடம் அமைத்துக்கொண்டு அங்குச் சிவயோகத்தில் அமர்ந்திருந்தார். கூத்தப்பெருமானை வழிபாடாற்றும் நாள்வர இவர் திருக்கோவிலுக்குச் சென்றார். ஆயினும் அங்குள்ளோர் இவரைத் தடுத்துவிட்டனர். இவருக்குரிய முறை நாளில் பிறிதொரு அந்தணர் வழிபாடாற்றச்செல்லப் பூசைப்பெட்டகத்தில் பெருமான் காணாதவராயினர். அனைவரும் கேட்க, 'நாம் உமாபதியின் பெட்டகத்தில் இருக்கின்றோம்' என்னும் வானொலி கேட்டது. அதன் மெய்ம்மை உணர்ந்த அந்தணர்கள் இவரை அழைத்து முன்போல் வழிபாடு செய்தருள வேண்டிக் கொண்டனர். இவரும் ஏற்றுச் செய்து வந்தார். கொற்றவன்குடித் திருமடத்தில் அரியநிகழ்ச்சியொன்று நடந்தது. பெற்றான் சாம்பான் என்பார் திருமடத்திற்கு நாளும் விறகு கொணரும் திருத்தொண்டைச் செய்து வந்தார். இவர் தாழ்ந்த வகுப்பினர். இவருக்குத் தீட்சையருள இறைவன், உமாபதி சிவத்திற்குத் திருமுகமொன்று அருளினன். அத்திருமுகத்தின்படி இவர் அவனுக்கு வீடு பேறளித்தனர். பெற்றான் சாம்பான் என்பாருடைய மனைவியார் இவ்வுண்மை உணராது அரசரிடம் சென்று தம் குறையைக்கூற அரசனும் உமாபதி சிவத்திடம் வந்து நீர் பெற்றான் சாம்பானுக்கு வீடுபேறளித்தது வாய்மையாயின் என் முன் பிறிதொருவருக்கும் வீடுபேறளிப்பீர் எனக் கூற இவரும் தாம் நாளும்வழிபட்டுவரும் சிவலிங்கத்திருமேனியின் திருமஞ்சன நீரால் வளர்ந்ததும், கோமுகியின் அருகே இருந்ததுமான முள்ளிச்செடி ஒன்றிற்குத் தம் அருள் நோக்கால் வீடுபேறளித்தார். அது கண்ட அரசனும் பெற்றான் சாம்பானின் மனைவியும், பிறரும் உண்மை யுணர்ந்து அவரை வழிபட்டுச் சென்றனர். பின் ஒருஞான்று தம்குருவாகிய மறைஞானசம்பந்தர் நெசவாளர் வீதி வழியே செல்கையில் அவர்கள் பாவிற்கு இடுதற்காக வைத்திருந்த கஞ்சியை வார்க்கக் கையேற்று உண்டார். உடன் வந்த உமாபதி சிவாச்சாரியார் தம் ஆசிரியர் கைவழி ஒழுகிய கஞ்சியைக் கையேற்று அருந்தினர். அதைக் கண்ட மறைஞான சம்பந்தர் அவருடைய பக்குவத்தை உணர்ந்து தமக்குப் பின் தம் ஞான பரம்பரையை வளர்க்குமாறு அவருக்குக் கட்டளையிட்டருளி வீடுபேறடைந்தார். மெய்கண்ட நூல்கள்

பதிநான்கனுள் எட்டு நூல்கள் அருளியவர் இவர். இவை யன்றித் திருமுறைத் திரட்டு, கோயிற் புராணம், திருமுறை கண்ட புராணம், திருத்தொண்டர் புராண சாரம், சேக்கிழார் புராணம், சிவஸ்தலசிவநாம சத்திநாமக்கலிவெண்பா, சதரத்ன சங்கிரகம், ஆகிய நூல்களையும், பௌஷ்கரபாஷ்யம் என்ற பேருரையையும் இவர் எழுதியுள்ளார்.

மனவாசகங்கடந்தார் :

இவர் திருவதிகையில்தோன்றியவர். மெய்கண்டார் மாணுக்கர் நாற்பத்தொன்மருள் இவரும் ஒருவராவார். இவர் அருள் நந்தி சிவாசாரியாரோடு ஒரு சாலை மாணுக்கராவர். இவரைப்பற்றிய வரலாறு வேறொன்றுந் தெரிந்திலது.

இவர்களின் காலத்தை அறுதியிடுதற்குத் திருவண்ணுமலைக் கல்வெட்டும், உமாபதிசிவம் அருளிய சங்கற்ப நிராகரணமும் துணையாகின்றன. இவ்வகையில் இவர்களின் காலத்தைப் பின் வருமாறு அறுதியிடலாம்.

(தொடரும்)

---

## பார்வையாளர் குறிப்பு

### திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

### ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானம், திருக்கடவூர்

இன்று 29—9—77 அன்று திருக்கடவூர் கோவிலுக்குக் குடும்பத்துடன் வந்து சகஸ்ர நாமம் செய்யும் பேறுபெற்றேன். தருமை ஆதீன ஆட்சிக்கு உட்பட்ட ஆலயம், மிகத் தூய்மையாகவும் காலம் முறைதவறாது பூஜையும், ஆலயத்தில் நுழைந்தபின், முழுமுதற்கடவுள், அபிராமி அம்மை இவர்களின் நினைவு அன்றி வேறு எந்த எண்ணமும் எழாது. இது தருமை ஆதீன ஆட்சியிலுள்ள எல்லாக் கோயில்களுக்கும் பொருந்தும். ஆன்மீக உணர்ச்சியில் ஒருபடி உயர்ந்த நிலையை அடைந்தோம். இங்குப் பணி புரிபவர்கள் ஆலயத்தின் சிறந்த பராமரிப்புக்காகப் பாராட்டுதலுக்கு உரியவர்கள். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவடிமலர்களுக்கு வணக்கம்.

(S-d) S. RADHA KRISHNAN,

Neyveli - 1
607801.

Deputy Chief Personal Manager.

**தா. குருசாமி,**
397 - வடக்கு மாசிவீதி,

மதுரை.
11—9—77.

## குரு வணக்கம்

சொற்பொரு ளமைந்தமுது நால்வர்தமிழ் வாய்கொண்டு
தோத்திரம் பாடியறியேன்
தூயவுள ளுகிரின தாயிரம் பேர்சொலித்
தோட்டுமலர் தூவியறியேன்
முற்பொருள தாமுன்னை யுள்ளபடி யுணர்கின்ற
மோனயோ கம்புரிகிலேன்
மூன்பிறவி யேழ்கடலை யெந்தவிதம் நீந்துவேன்
மூத்திதரு நீயிருக்கப்
பொற்பொரு ளிருக்குநில மீதிருந் தறியாது
பொங்கியெழு மிடியரைப்போற்
போக்கினேன் வாணாளை யினியேனும் தந்துநின்
பொன்னடிகள் சாரவருள்வாய்!
சிற்பொரு ளனச்சுருதி செப்பியொளிர் தீபமே!
செந்தமிழர் குலக்கொழுந்தே!
செகம்புகழும் தருமைவாழ் சண்முக தேசிக
ஞானசம் பந்தகுருவே!

---

### EXTRACT FROM THE VISITOR'S BOOK

Dharmapuram Adhinam
Sri Sattanathaswami Devasthanam, Sirkazhi.

Visiting this temple and other nearby temples. They clearly talk about the greatness of our country and the great people who lived before us.

(Sd.) C. M. LINGIAH,
South India Viscose Ltd.,
Coimbatore.

25—9—77.

உ
சிவமயம்

# ஆயில்யத்திருநாள் ஆலய வழிபாடு

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பதும், 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்பதும் நம்நாட்டில் வழங்கும்பழமொழிகள். மக்களைத்திருக்கோயில் வழிபாட்டில் ஈடுபடுத்தி, சைவ - சமயப் பெருமைகளை அறியச்செய்து உய்விக்கவேண்டும் என்ற பெருங்கருணையால் தருமையாதீனம் 26-ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தமது குருமூர்த்திகள் காட்டியருளிய வழியிலேயே தமது ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாளிலும் பாடல்பெற்ற தலங்கள்தோறும் முறையான வழிபாட்டிற்கு வழிகாட்டி வருகிறார்கள். மாதந்தோறும் காவிரி வடகரைத் தலங்களில் வழிபாடு நடைபெறுகின்றன. உழவாரப்பணி விசேட அபிடேக ஆராதனைகள், தலத் திருப்பதிகங்களை அச்சிட்டு ஒதிவழங்குதல், சமயப்பிரசாரம் முதலியன ஆயில்யத்திருநாள் வழிபாட்டின் அங்கங்களாகும்.

பிங்கள ௵ ஐப்பசித்திங்கள் 19-ஆம் நாள் (4—11—77) வெள்ளிக்கிழமை யன்று மாத ஜன்மநட்சத்திர மாதலின் அன்பிலாலந்துறையிலும் திருமாந்துறையிலும் வழிபாடு சிறப்புற நடைபெறும்.

(1) திருஅன்பிலாலந்துறை ஸ்ரீசௌந்தரநாயகி உடனுறைய ஸ்ரீ சத்தியவாகீசர் திருக்கோயிலில் காலை 10-மணி முதல் அபிஷேக ஆராதனைகளும் வழிபாடும் நடைபெறும்.

(2) திருமாந்துறை ஸ்ரீ அழகம்மை உடனுறைய ஸ்ரீ ஆம்பிரவனநாதர் திருக்கோயிலில் மாலையில் அபிஷேக ஆராதனைகளும் வழிபாடும் நடைபெறும்.

---

வழிபாட்டின்போது
தருமபுர ஆதீனக் கல்லூரி முதல்வர்,
**வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ., அவர்கள்**
விரிவுரை நிகழ்த்துவார்கள்.

**அனைவரும் வருக! வழிபட்டு உய்க! அரன் அருள் பெறுக!**

சிறுகதை :

# என்னைக் கண்டு கொள்ளே!

வேலூர். திரு. மு. பெருமாள்

செல்வச் சீமான் செல்வ மகன் சீனிவாசன் சினிமாக் காட்சிக்குப் போக மிக அவசரமாகத் தன் உடலை அலங்காரம் செய்வதில் சிந்தை மகிழ்வோடு ஈடுபட்டுக்கொண்டிருந்தான்.

மைனர் மன்னார்சாமி என்னடா சீனு! "செட்டி சிங்காரிப் பதற்குள் பட்டணம் பறிபோய்விடும்" என்பார்களே! அந்தப் பழமொழியை மெய்யாக்கி விடுவாய் போலுள்ளதே! இன்னுமா அலங்காரம் முடியவில்லை? இதற்குள் இரண்டு ரீல் ஓடிவிட்டிருக்குமே! நீ சினிமா பார்க்கும் லட்சணம் நல்லாயிருக்குதடா? உன்னைத் துணையாக நம்பி வருகின்ற என்னை முட்டாளாக்கி விடுகின்றாயடா!

இரு, இதோ முடிந்துவிட்டது என்று, அவசர அவசரமாகத் தன் உடல் முழுவதும் வாசனை செண்ட்டைத் தேய்க்கலானான். ஒரு டப்பா வாசனைப் பவுடரை அதன்மேல் கொட்டி முகம் உள்படத் தேய்த்தான். பின்னர் ஆடை அலங்காரம், தலைசீவுதல் முடித்தான். தன்னழகைக் கண்ணாடியில் திரும்பத் திரும்பப் பார்த்துக் கொள்ளலானான்.

மைனர் மன்னார்சாமி உனக்கு அடுத்த காட்சிதாண்டா கிடைக்கும். மணப்பெண் அலங்காரத்தையும் மிஞ்சிவிட்டதடா! உன் அலங்காரம் என்று கூறிச் சென்று விட்டான்.

பின்னர் சீனிவாசன் தன் காரில் சினிமாக் காட்சிக்குப் புறப்பட்டான். கூட்டம் டிக்கட்கிடைக்காமல் மோதிக்கொண்டிருந்தது. சுடு வெய்யில் சிரசு வெடிப்பதுபோல் கடுமையாக உறைத்தது. கையில் குடையுமில்லை. கதிரவன் கடுமையைத் தாங்கிக்கொள்ள இருகரங்களையும் தலைமீது வைத்துக் கொண்டு உஸ்! உஸ்! என்று தவிக்கலானான். உடம்பெல்லாம் வேர்வை வழிந்து வாசனையை ஒழித்துவிட்டது. வேர்வை மேலும் வெளிப்பட்டு உடம்பிலுள்ள துர்நாற்றத்தை வெளிக்காட்டிவீசத்தலைப் பட்டது. உடலில் மோதும் ஆட்கள் ஓய்! தள்ளிநில்லுமய்யா!

ஆளைப்பார்த்தா அலங்காரமாவுள்ளது. கத்தாழை நாற்றம் மூக்கைத் துளைக்கின்றது. சற்று ஒதுங்குமய்யா? சகிக்க முடிய வில்லை என்று ஏசலானார்கள். சீனிவாசனுக்கு வெட்கம் சொல்லி முடியவில்லை. கைக்குட்டையும் கொண்டுவர அவசரத்தில் மறந்து விட்டான். பாதிப்படம் ஓடியும் பாழாய்ம்போன கூட்டம் குறையவில்லை என்று காரில் வீட்டிற்குத் திரும்பிவிட்டான் சீனிவாசன்.

அதுசமயம் அம்மாவும் அப்பாவும் ஆலயத்துக்குப் புறப்பட ஆயத்தமானார்கள். கண்ணே சீனிவாசா! கார்டிரைவர்வரவில்லை; ஆதலால் நீ கார் எடுத்துக்கொண்டு கயிலாயநாதர் கோயிலுக்கு எங்களோடு வருக; இன்று கார்த்திகை சோமவாரப் புண்ணிய தெரிசனம் செய்வோம் என்று அழைத்தார் அவன் தாயார்.

தாத்தா நான்கு தலைமுறைக்கும் குறையாத செல்வங்களைச் சேர்த்துவைத்துவிட்டுச் சென்றுள்ளார். அதை வைத்துக் கொண்டு நீங்களும் அப்பாவும் ஏன் வீட்டில் அமைதியாக இருந்து ஆனந்தமாக உண்டு காலம் கழிக்கக்கூடாது? கோயில் குளம் என்று கட்டிக்கொண்டு அலைவானேன்? அந்தவிரதம்; இந்தவிரதம் என்று அடிக்கடி பட்டினிகிடப்பானேன்? வேண்டிய உணவு வீட்டிலிருக்க விரதமாவது! கிரதமாவது? ஏழைகளா நீங்கள் பட்டினிகிடக்க? வாய்க்கு உருசியான வகைவகையான உணவுகளை உண்டுவிட்டு சுகம், தாயம் ஆடி மகிழ்ந்து காலத் தைக் கடத்துங்களேன். பொழுது போகவில்லை என்றால் சினிமா படக்காட்சிக்குப்போய் மகிழுங்கள். நமக்கு என்ன இல்லை? கோயிலுக்குச் சென்று கடவுளை வேண்டி கேட்கும் குறை ஒன்று மில்லையே உங்கட்கு? ஏன் வீணாக மனதையும் உடலையும் வாட்டி வருத்திக்கொள்கின்றீர்களம்மா?

மகனே! முற்பிறவியில் நாம் செய்துள்ள மேலான புண்ணி யத்தால், இப்பிறவியில் எல்லாம்வல்ல சிவபெருமான் தந்தருளிய செல்வவாழ்வப்பா இது! மேலும் இச்செல்வவாழ்வு நமக்குநீடிக்க வேண்டுமானால் - மீண்டும் நாம் சிவ புண்ணியச் செயலாற்றினால் தான் - நம் நல்வாழ்வு நீடிக்கும். இதுவல்லாமல் இந்த இன்ப வாழ்வை விட என்றென்றும் நிரந்தரமான பேரின்ப வாழ்வு ஒன்றுண்டு. அது தான் சிவபக்தியால் விளையும் அழியாத ஆறுதல் அளிக்கவல்ல இன்பமாகும். ஆன்மாக்களாகிய நாம் - மனிதப்பிறவி யெடுத்துள்ளவர்கள் முக்கியமாக ஆற்ற வேண்டிய அரும்பெரும் சிவப்பேறுகும். உண்பதும், உறங்கு வதும், உலக பந்த வாழ்வில் மயங்கி உவப்பதும் நிரந்தரமான

மகிழ்ச்சியை உடையது அல்ல. பிறப்பு இறப்பு என்னும் பெருந் துன்பங்களிலிருந்து விடுபட்டால் பெருமகிழ்வு எய்தலாம். மகனே! நீ இப்போது இன்பம் என்று எண்ணி மகிழும் போக வாழ்வு பின்னர் சோக வாழ்வாகத்தான் முடியும். சிவபெருமான் வழிபாட்டில் சிந்தனையை வைத்து வந்தனை புரிந்து வாழ்வை வளப்படுத்திக்கொள்ள கோயிலுக்கு எங்களோடு வருக.

அம்மா! வீணாக மனப்பிரமை அடையாதீர்கள். நம்முடைய இந்தப் போக வாழ்வு என்றும் நீங்காது. கோயிலுக்குச்சென்று கடவுளைக் கும்பிட்டுத்தான் நம்முடையச் செல்வச்சுகவாழ்வைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்பதில்லை. நான் மாலையில் சினிமாப்படக் காட்சிக்குப் போகவேண்டும். வரமுடியாது என்று சென்றான் சீனிவாசன்.

பின்னர் மகனின் மாறான மனப்போக்கை எண்ணி மன வேதனைப் பட்டுக்கொண்டே, இருவரும் கோயிலுக்குச் சென்று மகன் நல்வாழ்வுப்பட வேண்டி வழிபட்டனர்.

சில நாட்களில் கண்டதே காட்சி, கொண்டதே கோலம் எனக் கண்டவர்களுடன்சேர்ந்து சுற்றியதால் செல்வபோகங்கள் யாவும் இழந்தான். சீரும், சிறப்பும் குறைந்தான். நல்குரவில் நிறைந்தான். வாழ்வு நடத்தத் தொழில்செய்ய விரைந்தான்.

ஒரு சிறு பட்டறையில் ஓண்டி வேலைக்கமர்ந்தான். கூலி போதவில்லை என்றாலும் குடும்பம் நடக்க வேண்டுமே! என்று இளைக்காது சளைக்காது உழைத்தான். தன் தாயும் தந்தையும் திருக்கோயில் போவதும், சிவபூஜையில் சித்தம் கொள்வதும் குறைக்காமல் இருப்பதைக்கண்டு சீற்றம்கொண்டு கண்டிப்பான். காலமெல்லாம் கடவுளை நம்பி வழிபட்டீர்களே! காப்பாற்றினரா? அந்தக் கடவுள் உங்களை; என்றும் கோயில் குளத்துக்கே போங்கள்; அந்தக் கடவுளே காப்பாற்றட்டும் உங்களை என்று கூறி விரட்டிவிட்டான் அவர்களை.

வேலை செய்யும் தொழிற்சாலை முதலாளியும் மிகவும் ஏழை. இருந்தும் சோர்ந்தாரில்லை. சினந்தாரில்லை. மனம் தளர்ந்தாரில்லை. சதா சிவ! சிவ! என்று சொல்லிக்கொண்டே தாமும் தொழில்புரிவார். தெய்வபக்தியே உய்யும் வழி என்பதில் உறுதி உள்ளவர் என்பதனைச் சீனிவாசன் கவனித்துவந்தான்.

நாளை நம் வீட்டில் நவராத்திரி விழா வழிபாடு நடைபெறும். ஆகவே அனைவரும் நம் வீட்டிற்குவந்து வழிபாட்டில் கலந்து

கொண்டு, விருந்து உண்டு மகிழ்ந்திடுவீர்களாக என்று அழைத்தார் முதலாளி மணவாளன்.

சீனிவாசனும் சென்றான். சிறு வீடுதான். இருக்க இடம் கூட இல்லை. நெருங்கி அமர்ந்தனர். பூஜை வழிபாடு முடிந்ததும், முதலாளி தன் தாய் தகப்பனாரை அழைத்து ஆசனத்தில் அமர்த்தி வணங்கி ஆசி பெற்றுக்கொண்டு, பின்னர் அனைவரையும் உண்ண வைத்தார். இதனைக்கண்ட சீனிவாசன் உள்ளம் உருகிவிட்டது. தன் பெற்றோரை உதாசீனம் செய்து விரட்டியதை எண்ணி துயரத்திலாழ்ந்தான்.

சில நாட்களில்முதலாளி, ஒருபெரிய ஆர்டர்வரப்பெற்று மிக்க வருமானம் வரப்பெற்றார். சீனிவாசன் போகவாழ்வில் மயங்கிக் கடவுளையும், பெற்றோர்களையும் உதாசீனப்படுத்தி உன்மத்தனாகி விட்டேன். தன் முதலாளியின் தன்மையையும், தெய்வபக்தியையும், அவர் கொண்டிருக்கும் தாய் தந்தை பக்தியையும் தம் முன்னால் அவரடைந்த உயர்வையும் எண்ணி மனவேதனைப் பட்டுக் கொண்டிருந்தான். தமது ஊர் எல்லையில் உள்ள அரச மரத்தடியில் அமர்ந்து வருந்திக்கொண்டிருந்தான். அதுசமயம் அவ்வழியே ஒரு சாது வந்தார். எழுந்து நின்று வணங்கினான் சீனிவாசன். கடவுள் கருணை புரிவாராக என்று ஆசிர்வதித்தார் அவர்.

திருநீறு வாங்கித் தரித்துக்கொண்டான். தன் தவறான போக்கையும், தான் கெட்ட சீரழிவையும் தெரிவித்துக் கண்ணீர் விட்டுக் கடைத்தேறத் தக்க வழிகாட்டுமாறு வேண்டினான். கண்கண்ட தெய்வங்களான தம் பெற்றோரையும், கருத்திலுறையும் தெய்வமான கடவுளையும் வணங்கித் தொண்டு செய்தால்தான் தன் மனம் சாந்தி அடையுமென வேண்டினான்.

"தம்பி! வருக இவ்வூர்ச் சிவாலயத்துக்குச் சென்று வழிபடுவோம். பெருமான் அருள்புரிவார்" என்று அழைத்துச் சென்று, சிவபெருமான் சந்நிதியிலே சிந்தையுருகி நின்றார் சாது. சீனிவாசனும் உடன் நின்று தொழுதான். சாது சுவாமியின் நிலையை நோக்கினான். அவர்; தம்மை மறந்தார்; தலைவராம் சிவத்தில் தம்மை ஈடுபடுத்தி உடம்பெல்லாம் விதிர் விதிர்த்தார். உரோமம் சிலிர்த்துவிட்டார். இரு கரங்களையும் தம் தலைமேல் வைத்துச் சிவா! சிவா! எனச் சிந்தையுருகிக் கண்ணீர் பெருக்கினார். "தொழுதகை துன்பந் துடைப்பாய் போற்றி! அழிவிலா ஆனந்தவாரி போற்றி! பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி! நீரிடை நான்காய் திரந்தாய் போற்றி! தீயிடை மூன்றாய்த்

திகழ்ந்தாய் போற்றி! வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி! வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி! அளிபவ ருள்ளத் தமுதே போற்றி! தளர்ந்தேன் அடியேன் தமியேன் போற்றி! அஞ்சே லென்றிங்கருளாய் போற்றி! என்றெல்லாம் போற்றிப் பாவியாகிய அடியேன் இனித் தேவரீரைக் கைவிடா மல் பற்றி நின்று போற்றுகின்றேனே! அடியேனையும் ஒரு பொருளாகக் கண்டுகொண்டு அருள்புரிவாயாக ஐயனே! அருள் மெய்யனே! எனப் பின்வரும் திருவாசகப் பாடலைப் பாடி உருகினார்.

மெய்தா னரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந் துன்னைப்போற்றி சயசய போற்றி யென்னும்
கைதா னெகிழ விடேனுடை யாயென்னைக் கண்டுகொள்ளே.

எல்லாம் வல்ல சிவபெருமானே! எளியேனுக்கு இவ் வுலகி லுள்ள உடையவனான ஒரு பெருமானே! எளியேனைக் கண்டு கொண்டு கருணை பாலித்தருள்க என வேண்டியதைக் கேட்ட சீனிவாசன் அச்சாது மகான் அடி மலர்மீது வீழ்ந்து வணங்கி அடியேனை உய்ய வழி காட்டிய குருமணியே! எனப் போற்றிப் பணிந்தான். தானும் நைந்துருகிப் பெருமானை வழிபட்டான். அதுசமயம் அவன் பெற்றோர் இருவரும் ஆலயந்தொழவந்தனர். தன் மகனைத் தடுத்தாண்ட மகானை வணங்கி மகிழ்ந்தனர். போற்றி புகழ்ந்தனர். தங்கட்கு வழியில்கிடைத்த பணமுடிப்பைத் தந்தனர் மகனிடம். சீனிவாசன் பெற்றோர்களுடன் சேர்ந்து சித்தத்தைச் சிவன்பால்வைத்துச் சிறந்து வாழ்ந்தான்.

---

## பார்வையாளர் குறிப்புக்கள்

### திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

### சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம்

இராணி மேரி கல்லூரி ஆசிரியை மாணவியர் (68 பேர்) கோவிலுக்கு வந்திருந்து எல்லாச் சந்நிதிகளையும் வழிபட்டோம். பிராகாரம் கோயில் தீர்த்தம் எல்லாம் கண்டு விளக்கங்கள் தெரி விக்கப்பெற்றும் பிரசாதமும் பெற்று திருப்தி அடைந்தோம். நிர்வாகத்தினருக்கு எம் நன்றி.

(Sd) அலமேலு ரிஷி,

8—10—77 கனகசுந்தரம்.

# செய்திகள்

## ஆயில்யத்திருநாள் ஆலய வழிபாடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமை யாதீனம் 26-ஆவது குரு மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் ஜன்ம நக்ஷத்திர மாகிய ஆயில்யத் திருநாள் வழிபாடு 8—10—77 சனிக்கிழமை யன்று திருக்கானூர் ஸ்ரீ சிவயோகநாயகி உடனுறைய ஸ்ரீ செம்மேனிநாதர் திருக்கோயிலில் சிறப்பாக நடைபெற்றது. அன்று நண்பகல் சுவாமி அம்பாளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. திருக்கானூர்த் தலத் தேவாரத் திருப்பதிகங்கள் அடங்கிய நூல் வெளியிட்டு வழங்கப்பெற்றது. தேவாரத் திருப்பதிகப்பாராயணமும், தருமை யாதீனத் தமிழ்ப்புலவர் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ., அவர்களால் விரிவுரையும் நிகழ்த்தப்பெற்றன. அன்பர்கள் பலர் வழிபட்டுப் பயன்பெற்றனர்.

## மறைஞானசம்பந்தர் குருபூஜை விழா

**தருமபுரத்தில் :**

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் 14—9—77 புதன்கிழமையன்று ஸ்ரீ மறைஞானசம்பந்தர் குருபூஜை விழா சிறப்பாக நடைபெற்றது. அன்பு நெறி, அறிவு நெறி, என்ற இறைவனை அடையும் நெறிகள் இரண்டனுள் அறிவுநெறியைச் சாத்திரத்தின் வழி விளக்கியவர்கள் சந்தானுசாரியர்கள். அவர்களுள் மூன்றுமவராகத் திகழ்பவர் மறைஞானசம்பந்தர். அவரது குருபூஜைத் திருநாளாகிய உத்திர நட்சத்திரத்தன்று சமயாசாரியர் சந்தானுசாரியர்களுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. அன்று காலை மாலை இரு வேளைகளிலும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கியருளினார்கள். அன்று மாலை தருமையாதீனப் புலவர், வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ., அவர்கள் " வினா வெண்பா " என்ற தலைப்பிலும், வித்துவான். திரு. கா. ம. கண்ணப்பன் அவர்கள் " மறைஞானசம்பந்தர் " என்ற தலைப்பிலும் விரிவுரையாற்றினார்கள். அன்பர்கள் பலர் கேட்டுப் பயன் பெற்றனர்.

திருக்களாஞ்சேரியில் :

சிதம்பரம் - திருக்களாஞ்சேரி சிங்காரத்தோப்பில் திருவாவடுதுறை ஆதீன அருளாட்சியில் உள்ள ஸ்ரீ மறைஞான சம்பந்தர் குருமூர்த்த ஆலயத்தில் ஸ்ரீ மறைஞானசம்பந்தருக்குத் தருமையாதீனச் சார்பில் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. அன்று தில்லை சபாநாயகர் திருக்கோயிலில் ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு சகஸ்ரநாமார்ச்சனை செய்து வழிபாடு இயற்றப்பட்டது. ஆங்காங்கும் பக்தர்கள் பலர் வழிபட்டுப் பயன் பெற்றனர்.

## அருணந்திதேவர் குருபூஜை விழா

தருமபுரத்தில் :

இறைவனை அடையும் நெறிகளுள் அறிவுநெறியை சாத்திரத்தின் வழி விளக்கிய சந்தானுச்சாரியர்களுள் இரண்டாமவராகத் திகழ்பவர் அருணந்திதேவர் ஆவர். இவர் 14 சாத்திரங்களுள் சிவஞானசித்தியார், இருபா இருபஃது என்னும் இரண்டு நூல்களையும் அருளியவர். இவருக்குச் சகலாகமபண்டிதர் என்ற மற்றொரு பெயரும் வழங்குவதுண்டு. இவரது குருபூஜைத் திருநாள் 10—10—77 திங்கட்கிழமை பூர நட்சத்திரத்தன்று தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் சிறப்பாக நடைபெற்றது. அன்று காலை சமயாசாரியர், சந்தானுசாரியர்களுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. அன்று காலை மாலை இருவேளைகளிலும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கியருளினார்கள். மாலை 7 மணிக்கு வித்துவான். திரு. மு. ஆறுமுக தேசிகர் அவர்கள் அருணந்திதேவர் அருள் வரலாற்றை விளக்கிக் கூறி சிவஞான சித்தியார், இருபா இருபஃது என்னும் நூல்கள்பற்றியும் விரிவுரையாற்றினார்கள். பலர் கேட்டுப் பயன் பெற்றனர்.

திருத்துறையூரில் :

திருவாவடுதுறை ஆதீன அருளாட்சியில் உள்ள துறையூர் ஸ்ரீ சிஷ்டகுருநாதேசுவரர் திருக்கோயில் சந்நிதியில் உள்ள ஸ்ரீ அருணந்திதேவ நாயனார் குருமூர்த்த ஆலயத்தில் குருபூஜை விழா 10—10—77 அன்று சிறப்பாக நடைபெற்றது. அன்று நண்பகல் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் மாலையில் சிறப்பு வழிபாடும் தருமையாதீனச் சார்பில் நிகழ்த்தப் பெற்றன.

அன்றுமாலை ஸ்ரீ சிஷ்டகுருநாதேசுவரர் திருக்கோயிலிலும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. மாலை 7 மணி அளவில் குருமூர்த்த ஆலயத்தில் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித்தமிழ்ப்பேராசிரியர் வித்துவான். திரு. மு. சிவச்சந்திரன் எம். ஏ., அவர்கள் " அருணந்திதேவர் அருள் நூல்கள் " என்ற தலைப்பிலும், திருவதிகைத் தமிழாசிரியர் வித்துவான். திரு. ந. சண்முகசுந்தர தேசிகர் அவர்கள் " அருணந்திதேவர் அருள் வரலாறு " என்ற தலைப்பிலும் விரிவுரையாற்றினர்கள். பலர் கேட்டுப் பயன் பெற்றனர்.

## தருமையாதீனத் திருக்கோயில்களில் நிறைபணி விழா

நிறைபணி என்பது புரட்டாசித் திங்கள் பௌர்ணமிநாளில் சிவபிரானுக்கும் அம்பிகைக்கும் செய்யப்பெறும் ஏகதின உற்சவமாகும். இந்நாளில் இறைவன் சந்நிதிகளில் தோரணங்கள் முதலியவற்றைக்கட்டி அழகுறுத்தி இறைவனுக்கு அபிஷேக ஆராதனைகளுடன் வழிபாடு நிகழ்த்துதல் வேண்டும். இவ் விழாச் செய்வதால் நினைத்த காரியங்கள் கைகூடும். செல்வச் செழிப்பு ஏற்படும். வீடுபேறு கிட்டும். மக்கள் நன்மை பெறுவர் என்று கூறப்பெறுகிறது. இவ்விழாவை நிகழ்த்தி திருமால், பிரமன், இந்திரன் ஆகியோர் இஷ்டசித்திகள் பெற்றனர் என்று சிவரகசியம் என்னும் நூல் கூறுகிறது. இத்தகு சிறப்புமிக்க விழா, தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவுளப்பாங்கின் வண்ணம் தருமபுரம் ஸ்ரீ ஞானம்பிகை உடனுறைய ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலிலும், தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கோயில்களாகிய வைத்தீஸ்வரன்கோயில் ஸ்ரீ தையல்நாயகி உடனுறைய ஸ்ரீ வைத்தியநாதசுவாமி திருக்கோயிலிலும், சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி திருக்கோயிலிலும், திருக்கடவூர் ஸ்ரீ அபிராமியம்மை உடனுறைய ஸ்ரீ அமிர்தகடேசுவர சுவாமி திருக்கோயிலிலும், திருபுவனம் ஸ்ரீ அறம்வளர்த்தநாயகி உடனுறைய ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி திருக்கோயிலிலும் சிறப்பாக நடைபெற்றது. ஆங்காங்கும் அன்பர்கள் பலர் வழிபட்டுப் பயன் பெற்றனர்.

### கல்வி மாவட்ட விளையாட்டு விழாவில்
## ஆதீன உயர்பள்ளி மாணவர்களுக்கு சுழற்கோப்பைப் பரிசு

தருமை யாதீனம், ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்பள்ளி மாணவர்கள் மாயூரம் கல்வி மாவட்டப் பூப்பந்து ஜவர் (பொது நிலை) விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு முதலிடத்

தைப்பெற்றுள்ளனர். இப்போட்டி 14 பள்ளிகட்கு இடையே 12, 13—9—77 தேதிகளில் தருமபுரம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளி மையத்தில் நிகழ்வுற்றது. போட்டியிற் கலந்துகொண்டு முதல் இடத்தைப்பெற்று வெற்றிகொண்ட தருமபுரம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்பள்ளி குழுவிற்கு 12—10—77 அன்று நிகழ்ந்த மாவட்ட விளையாட்டுப் போட்டி விழாவில் தமிழ்நாடு அரசு விவசாயத்துறை அமைச்சர் மாண்புமிகு P. குழந்தைவேலு B. A., B. L. அவர்களால் சுழற் கோப்பைப்பரிசு அளிக்கப்பெற்றது.

12—10—77 அன்று மாயூரம் நகராட்சி உயர்பள்ளி விளையாட்டுக் களத்தில் (இராஜன்தோட்டம்) நிகழ்வுற்ற 1500 மீட்டர் மாயூரம் கல்வி மாவட்ட விளையாட்டு விழா ஓட்டப்பந்தயத்தில் தருமபுரம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்பள்ளி ஒன்பதாம் வகுப்பு மாணவன் R. சந்திரசேகரன் இரண்டாம் இடத்தைப்பெற்று சான்றிதழ் பெற்றுள்ளான்.

### தருமபுரம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்பள்ளி

## இலக்கியமன்றம் - திருத்தொண்டர் திருநாள் விழா

தருமையாதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்பள்ளியில் 10—10—77 திங்கட்கிழமையன்று பிற்பகல் 3—30 மணியளவில் இலக்கிய மன்றச் சார்பில் திருத்தொண்டர் திருநாள் விழாவும், பெற்றோர் - ஆசிரியர் சங்க விழாவும் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. மாயூரம், தருமபுரம் ஸ்ரீ ஞானாம்பிகை அரசினர் மகளிர் கலைக்கல்லூரி முதல்வர், செல்வி. சீ. பார்வதி எம். ஏ., அவர்கள் தலைமையேற்று, உரையாற்றினார்கள். 63 தனியடியார்கள்பற்றியும் 9 தொகையடியார்கள்பற்றியும் அறுபத்தைந்து மாணவர்கள் ஒன்றரைமணி நேரத்தில் " திருத்தொண்டர் " என்ற தலைப்பில் உரைக்கோவை நிகழ்த்தினர். பின்னர் அமுதமொழி, அவ்வை. திரு. சோம. சாமிநாதன் அவர்கள் " நீதிநூல் செய்த அவ்வை " என்றதலைப்பில் சிறப்புரையாற்றினார். பெற்றோர்களும் பெரியோர்களும் கலந்துகொண்டு விழா நிகழ்ச்சிகளைக்கேட்டு மகிழ்ந்தனர். நாட்டு வாழ்த்துடன் விழா இனிது நிறைவெய்தியது.

## சென்னை, தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையம்

மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு :

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையச் சார்பில் இந்த வழிபாடு 25—9—77 தேதி ஞாயிற்றுக்கிழமை காலை திருப்

போரூர் ஸ்ரீ கந்தசாமி கோயிலில் சிறப்பாக நடைபெற்றது: ஸ்ரீ விநாயகருக்கு அர்ச்சனை செய்தபிறகு ஸ்ரீ கந்தசாமிக்கு அபிஷேக அர்ச்சனை ஆராதனைகள் செய்யப்பட்டன. பின்னர் எல்லா மூர்த்திகளுக்கும் அர்ச்சனை செய்யப்பட்டது. வழிபாட்டின் போது ஓதுவார் திரு. S. ஞானப்பிரகாசமும், திரு. N. இராம மூர்த்தி அய்யர், குமாரி R. கௌரி குழுவினரும், திருமுறை பயிலும் குழந்தைகளுடன் திருமுறைப் பாராயணம் செய்தனர்.

வழிபாட்டிற்குப் பிறகு சமயப் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. கோயில் சிவாச்சாரியார் எல்லோரையும் வரவேற்றார். திரு. N. R. முருகவேள் அவர்கள் திருப்போரூர் தலவரலாற்றின் சிறப்பை எடுத்து விளக்கி, இத்திருக்கோயில் முருகன், குல தெய்வமாகவும் கண்கண்ட தெய்வமாகவும் விளங்கி வருகிறார். எனக்கும் குலதெய்வமாக விளங்குகிறார். வழிபடுபவர்களுக்கு வாழ்க்கையில் வளமையும், முன்னேற்றமும் ஏற்படும் என்று விரிவுரையாற்றினார்கள். உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களும் மாணவர்களும் ஆரம்பிக்க இருந்த உழவாரப்பணியை அவர் கேட்டுக் கொண்டபடி நிலைய சுவாமிகளின் தலைமையில் துவக்கி வைத்தார். அடுத்துப் பேசிய திரு. சிம்மக்குரல் சீதாபதி அவர்கள் தருமையாதீனத்தால் மாதந்தோறும் சிறப்பாக நடத்தப் பட்டு வரும் சமயப்பிரசார கூட்டு வழிபாட்டில் உழவாரப்பணி தொடங்கப்பெறுவது மிகவும் பொருத்தமானது. இன்று சதயத் திருநாள் ஆதலின், அப்பர் மேற்கொண்ட உழவாரப்பணியை இவ்வூர்ப் பள்ளி மாணவர்கள் செய்வது இறையருளைப் பெறுவதற்கு ஏதுவாகும் என்று சொன்னார்கள். திரு. E. தேவராஜன் அவர்கள் மனிதன் மன அமைதியுடன் வாழவேண்டும். மன அமைதியைப் பெறுவதற்கு ஆண்டவன் நமக்குக் கொடுத்திருப் பதைக்கொண்டு திருப்தியடைந்து நமக்கு இவ்வளவு சௌகரியத்தையாவது ஆண்டவன் கொடுத்திருக்கிறாரே என்று நினைத்து அவரைப் போற்றி வாழவேண்டுமென்று சொன்னார்கள். குமாரி கௌரி சிவபூஜையின் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறி, சிவபூஜையைத் தவறாது செய்து வரவேண்டும் என்று சொல்லி, நக்கீரர் திருமுருகாற்றுப்படை இயற்றுவதற்குக் காரணமாக இருந்த வரலாற்றையும் எடுத்துரைத்தார். திரு. R. சிவஞானம்செட்டியார். "சமயாச்சாரியார் நால்வரும்" சைவமும் தமிழும் தழைத்தோங்கப் பாடுபட்டு பக்தி நெறியைத் தமிழகத்தில் பரப்பினார்கள். அந்தச் சீரிய அடிச்சுவற்றைப் பின்பற்றி தருமையாதீனம் பல்லாற்றாலும் சமயப் பிரசாரத்தைச் செய்து வருகிறது. அதில் ஒன்று மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு என்று கூறினார்.

பிரசார நிலையம், வித்துவான் ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் பேசுகையில் தவம் என்பது சரியை, கிரியை, யோகம், ஞானம் என்றும், அவைகளில் ஒன்றாகிய சரியையின் ஒரு பகுதி தான் உழவாரப்பணி; இது அப்பர் பெருமானால் முதன்முதலில் துவக்கப்பட்டது; அவர் முத்திப்பேறெய்திய சதயத் திருநாளில் அவர் மேற்கொண்ட பணியை மாணவர்கள் மேற்கொள்வது நன்னெறியை அடைவதற்குச் சிறந்த வழியாகும் என்று கூறி, கோயிலில் உள்ள எல்லோருக்கும் நன்றி கூறிக் கூட்டத்தை நிறைவு செய்தார்கள்:

உழவாரப்பணியில் ஈடுபட்டிருக்கும் ஆசிரியர்களில் ஒருவர் தருமை ஆதீனம் மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு நடத்தும் நன்னாளில் மேற்படி பணியைத் துவக்கிவைத்திருப்பது மகிழ்ச்சிக்குரியது என்று சொல்லி, ஆசிரியர்கள் மாணவர்கள் சார்பில் நன்றியையும் தெரிவித்துக் கொண்டார்கள்.

---

தருமையாதீனம்

## வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம்,

வைத்தீசுவரன்கோயில்.

சீகாழி வட்டம் – தஞ்சை மாவட்டம்.

## திருவிளக்கு அறக்கட்டளை நிதி

காணிக்கை செலுத்தியவர்களின் பெயர் விபரமும்
மாயூரம் இந்தியன் வங்கியில் உள்ள முதலீடுகள் விபரமும்

( மலர் 36, இதழ் 10, பக்கம் 490 இன் தொடர்ச்சி )

| | | | |
|---|---|---|---|
| 108 | திரு. R. ராஜலட்சுமி, சென்னை | ரூ. | 1000 |
| 109 | உண்டியல் நிதி | ரூ. | 1000 |
| 110 | ,, | ரூ. | 1000 |
| 111 | ,, | ரூ. | 1000 |
| 112 | ,, | ரூ. | 1000 |
| 113 | ,, | ரூ. | 1000 |
| 114 | ,, | ரூ. | 1000 |
| 115 | திரு. H. சுப்பராமன், செகந்திராபாத் | ரூ. | 1000 |
| 116 | திரு. S. வைத்தியநாதன், செட்டூர், பம்பாய் | ரூ. | 1000 |
| 117 | திரு. K. பஞ்சாபகேசன் - லெக்ஷ்மி, கூனூர் | ரூ. | 1000 |
| 118 | திரு. K. S. நாராயணசாமி, ஹைதராபாத் | ரூ. | 1000 |
| 119 | திரு. K. அருணாசல முதலியார், சீகாழி | ரூ. | 1001 |
| 120 | திரு. மு. திருவேங்கடம், சைதாபேட்டை, சென்னை | ரூ. | 1000 |
| 121 | திரு. G. ராமகிருஷ்ணன், சிங்கப்பூர் | ரூ. | 1000 |

# எதிர்காலம்

**ஜோதிஷம். திரு. A. இராசமாணிக்கம்**

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

( பிங்களஹு ஐப்பசிமீ 1உ முதல் 30உ முடிய )

( 17—10—1977 முதல் 15—11—1977 முடிய )

ஸ்ரீ பிங்களஹு ஐப்பசிமீ 1உ சோமவாரம் கேட்டை நக்ஷத்திரம் பாலவகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 20 நாழிகை 2 விநாடிக்கு மகர லக்னத்தில் ஸ்ரீ லோக ரட்சகரான சூரிய பகவான் லோக சுபிட்சார்த்தத்தை முன்னிட்டு கன்னியா ராசியிலிருந்து துலா ராசி சங்கிர மணமாக ஐப்பசி மாதப் பிரவேசம் செய்கிறார். அன்று விஷு புண்ணிய கால மாகும். ரஸாதிபதி சந்திரன் ஆகிறார். சங்கிரமணகால கிரகஸ் திதியின் பலனுவது, லோகத்தில் இரஸ வஸ்துக்களாகிய எண்ணெய், வெல்லம், தேன், பால், தயிர், சர்க்கரை ஆகியவை நிறைய உண்டாகும். ஈஸ்வர க்ருபையால் பிரஜைகள் அனை வரும் ஆரோக்கியத்துடன் ஜீவனோபாய வசதிகளைப் பெற்றுய் வார்கள். திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் மகா உத்தமசிலர் களாகத்திகழ்கின்ற ஞானகுரு மகான்கள் அருளுகின்ற சிவஞான வியாக்கியானத்தின் வழியில் லோகமெங்கும் தேவாலயங்களில் தெய்வாராதனைகள் லோகோபகார விழாக்கள், சிவசமய பிரசாரங்கள் வெகுவாக நடைபெற்று வரும். சிவசமயம் உலக மெங்கும் பரவும். உலக நாடுகளில் சமரசம் ஏற்படும். ஈஸ்வர ஆக்ஞையினால் தேசங்களில் எங்கும் தேசத்தலைவர்கள் பிரஜா சம்ரக்ஷண நீதிபரிபாலனம் செய்து வருவர். சகலமான பிரஜை களும் க்ஷேமகரமாக வாழ்வார்கள்.

### 1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

( சு. சே. சோ. லா. – லி. லு. லே. லோ. – அ. )

மேஷராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பாபி விருத்தியில் எல்லா பிரச்சினைகளையும் சமாளிக்கும் அளவிற்கு பண வரவுகள் வந்துகொண்டிருக்கும். 15உ அளவில் சகோதர ருக்கு ஓர் நற்பலன் ஏற்படும். வித்தியா வியாபாராதிகளில்

எழுத்து மூலிய காரியங்களில் மந்தமாக இருந்தவை நீங்கி பிரகாச நிலைமை உண்டாகும். பூமி இயந்திரங்களில் ஓரளவு அபிவிருத்திபலன் தரும். புத்திரர்களின் ஜீவனோபாயத்தில் உடல் நலத்தில் க்ஷீணம் ஏற்படும். சனீஸ்வர சகஸ்ரநாம அருச்சனை செய்ய நலம்தரும். செய்தொழிலில் கடமைப் பணிகள் நடந்துகொண்டிருக்கும் புதன் வியாழன் சுபமாகும்.

## 2. ரிஷபம் – கார்த்திகை ¾ – உரோகிணி – மிருகசீர்ஷம் ½

( இ. ஊ. ஏ. – ஓ. வ. வி. வூ. – வே. வோ. )

ரிஷபராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். குடும்பாபிவிருத்தியில் பணவசதிகள் தாராளமாக இருந்துவரும். சகோதரருக்கு சௌக்கிய பலனைத்தரும். வீடு வாகனாதிகளின் சௌகரியம் நன்றாக இருந்துவரும். பூமி இயந்திரங்களின் அபிவிருத்தியில் போதியபலனை அளித்துவரும். வித்துவத்துவம் கலைத்துறையில் விசேஷ அனுகூலங்களை ஏற்படுத்தும். தார புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். செய்தொழில் அல்லது உத்தியோகத்தில் அலுவல்கள் சுமந்து காணும். ஆயினும் சாமார்த்தியத்தால் பூர்த்தியாகும். வெள்ளி சனி சுபமாகும்.

## 3. மிதுனம்–மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾

( கா. கி. – கு. க. ங. ச்சா. – கே. கோ. ஹ. )

மிதுன ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் தன வரவு சீராக இருந்துவரும். மிதமிஞ்சிய செலவுகளை ஏற்படுத்தும். எதிலும் மனோவேகம் வரும்படியான நிலைமை ஏற்படும். சகோதர மனஸ்தாபமும் உடன் சமாதானமும் ஆகும். பூமி இயந்திர வகையில் சிரமம் தோன்றும். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு அருச்சனை செய்ய நன்மையாகும். 15உ க்கு மேல் எழுத்துமூல லேவாதேவிகளில் நற்பலன்தரும். தார புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். செய்தொழில்கள் சாதாரணமாக நடந்துவரும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

## 4. கடகம்– புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்

( ஹி. – ஹு. ஹே. ஹோ. ட. – டி. டு. டே. டோ. )

கடகராசி 9 பாதங்களும் சுமாரான பலனாக நடந்துவரும். பண வசதிகள் நன்றாக இருந்துவரும். இருப்பினும் வரவேண்டிய பொருள்கள் காலதாமத வரவாக இருந்துவரும். புத்தி சாதுர்யத்தினால் எல்லாப்பிரச்சினைகளையும் சமாளித்தல் ஆகும். சகோதர சௌக்கியம் நன்றாக இருந்துவரும். மாதம்

பிற்பகுதியில் எல்லா விஷயங்களும் நற்பலனாக நடக்கும். வித்தியா வியாபாராதி கலைத்துறையில் பிரசித்தம் ஏற்படச் செய்யும். தார புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்து வரும். செய்தொழில்களில் அலுவல்கள் திறம்பட நடந்து வரும். புதன் வியாழன் சுபமாகும்.

5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼

(ம. மி. மு. மெ. – மோ. ட. டி. டு. – டே.)

சிம்ம ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். குடும்பாபி விருத்தியில் சமயோசிதமாகப் பணவருவாய்கள் ஏற்பட்டுவரும். சகோதரர்களினால் செலவு ஏற்படும். பூமி இயந்திர வகையில் அதிக செலவும் ஓரளவு வருவாயும் ஏற்படும். புத்திரர் சுகம் திருப்தியளிக்கும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். எழுத்து ஒப்பந்த லேவாதேவிகளில் காலதாமதத்தில் பலன் ஏற்படும். சனிக்கிரக பீரிதி செய்ய நலம் தரும். செய்தொழில் களில் 21 உ முதல் நற்பலன் ஏற்படும். வெள்ளி சனி சுபமாகும்.

6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½

(டோ. ப. பி. – பு. ஷ. ண. ட. – பே. போ.)

கன்னியா ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். குடும்பாபிவிருத்தியில் இருந்த சிரமங்கள் நீங்கி பண வசதிகள் ஏற்படும். சகோதரர் சுகம் நன்றாக இருந்துவரும். பூமி இயந்திரசாதனங்களில் அபிவிருத்திபலன் தரும். வித்துவத் துவம் கலைத்துறையில் அரசாங்க அனுகூலங்களை ஏற்படுத்தும். மாதாபிதாக்களுக்கு உடல் நலிவாக உள்ள ரோகங்கள் குண மாகும். புத்திர நலம் சாதாரணமாக இருந்துவரும். தாம்பத்ய வாழ்வில் அன்யோன்யம் நிலவும். செய்தொழில்களில் அலுவல் கள் திறம்பட நடந்துவரும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

7. துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

(ர. ரி. – ரு. ரே. ரோ. தா. – தி. து. தே.)

துலாராசி 9 பாதங்களும் சுமார்பலனாக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் பணம் தட்டுப்பாடு இல்லாமல் வந்துகொண் டிருக்கும். சகோதரர் மனக்குறை ஒருபுறம் இருப்பினும் ஒத் துழைப்புத்தருவர். பூமி இயந்திரவகையில் அலைச்சல். பின் நற் பலனேற்படும். வித்தியா வியாபாராதி கலைத்துறையில் 15 உ க்குப்பிறகு நற்பலன் ஏற்படும். பெண்கள்வகை அபிவிருத்தியும் வாகன சுகமும் திருப்தியளிக்கும். செய்தொழில்களில் அவசர அலுவல்களும் ஆதாயமும் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். செவ்வாய் புதன் சுபமாகும்.

8. விருச்சிகம் - விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை.

( தோ. - ந. நி. நு. நெ. - நோ. ய. யி. யு. )

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் பண வரவுகள் ஓர் அளவிற்கு வந்து கொண்டிருக்கும். சகோதரர் சுகாசுகம் மிச்சிரமாக இருந்து வரும். ஸ்திரீ வகையில் ஆடம்பரச் செலவு ஒரு புறம் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். பிதா வகை சொத்து வருவாயில் தடங்கல் சம்பவித்து முடிவில் வந்துசேரும். தன் ஸ்திரீக்கு வாயு பீடிதம் ஏற்பட்டுக் குணமாகும். செய்தொழில்களில் அல்லல் தோற்றும். சனீஸ்வர சகஸ்வர நாம அருச்சனை செய்ய நலம்தரும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

9. தனுசு - மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

( யே. யோ. பா. பி. - பு. த. ப. ட. - பே. )

தனுர்ராசி 9 பாதங்களும் சுமார்பலனாக நடக்கும். குடும்பாபி விருத்தியில் பண வரவுகள் ஓர் அளவு வந்துகொண்டிருக்கும். சகோதரர் மனஸ்தாபம் வந்து உடன்தீரும். பந்து அம்மான் களின் நலன்களுக்கு ஈடு பாடும் பொருட் செலவும் ஏற்படும். பூமி இயந்திர வகையில் சாதாரண பலனாக இருந்துவரும். இராசிக்கு ஓர் விபத்து வந்து தப்பும். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு அருச்சனை செய்ய நலம்தரும். தாம்பத்திய வாழ்வில் சுகம் நிலவும். செய்தொழில் புகழுடன் விளங்கும். இலாப விரயம் சமனாக இருக்கும். சனி, ஞாயிறு சுபமாகும்.

10. மகரம் - உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

( போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - கா. கி. )

மகர ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடந்துவரும். குடும்பாபிவிருத்தியில் பண வரவுகள் சீராக வந்துகொண்டி ருக்கும். பெரும் பிரயத்தனத்தின் மீது சௌகரியங்களை ஏற் படுத்திக்கொள்ளல் ஆகும். சகோதரர் மாறுதல் பான்மையில் காட்சி தருவர். வித்தியா வியாபாராதி கலைத்துறையில் ஓரளவு நற்பலன் வந்துகொண்டிருக்கும். புத்திரர் சுகம் திருப்தியளிக் கும். தாம்பத்திய வாழ்வில் முன்பிணக்கும், பின் சுமுகமுமாகும். செய்தொழிலில் பெரும் பிரயத்தனத்தில் ஓர் நற்பலன் ஏற்படும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

11. கும்பம் – அவிட்டம் ½ – சதயம் – பூரட்டாதி ¾
( கு. கே. – கோ. ஸ. ஸி. ஸூ. – ஸே. ஸோ. த. )

கும்ப ராசி 9 பாதங்களும் நற்பலன் தரும். தனுதி சௌகரியங்கள் நன்ருக இருந்து வரும். சகோதரர் விசுவாசம் ஒத்துழைப்பு திருப்தி யளிக்கும். பூமி இயந்திர வகையில் நற்பலன் வந்து சேரும். இருணங்கள் நிவர்த்தியாகும். புத்திரர் புத்திரிகளுக்கு விவாகப் பிராப்தி ஏற்படும். எல்லா விஷயங்களிலும் சிறப்பும், மகிழ்ச்சியும் தரும். மனைவிக்கு பித்தவாயுவால் நலிவு ஏற்படினும் உடன் குணமாகும். செய்தொழில்களில் அலுவல்கள் வெற்றிகரமாக நடந்து வரும்: சனி ஞாயிறு சுபமாகும்.

12. மீனம் – பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி– ரேவதி.
( தி. து. ஸ. ச. த. – தே. தோ. ச.சி. )

மீன ராசி 9பாதங்களும் சுமார்பலனுக நடக்கும். குடும்பத்தில் பணம் வரவும் செலவும் சரி சமனுக இருக்கும். சகோதரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். பூமி இயந்திர வாகனங்களில் உள்ள இருணங்கள் ஓரளவு ஈடு ஆவதற்குரிய நிலைமை உருவாகும். புத்திரனுக்கு ஓர் விபத்து வந்து தப்பும். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு அருச்சனை செய்ய நலம் தரும். செய்தொழில்கள் நன்ருக நடந்துகொண்டிருக்கும். செவ்வாய் புதன் சுபமாகும்.

---

## பார்வையாளர் குறிப்பு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

### ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானம், திருக்கடவூர்.

திருக்கடவூர் திருக்கோயிலுக்கு இன்று வந்து வழிபாடு மேற்கொண்டேன். தருமபுர ஆதீனத்தின் பெரும்பொறுப்பில் உள்ள இத்திருக்கோயில் நடைமுறைகள் செம்மையாகவும், தூய்மையாகவும், மரபு பிறழாமலும் நிகழ்வது பாராட்டிற்குரியது.

(S-d) லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்,
துணைவேந்தர்,
அண்ணமலைப் பல்கலைக் கழகம்.

11—9—77.